Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

உதயன்

சுடர் : 39
கதிர் : 217

ஞாயிற்றுக்கிழமை
30 ஜூன் 2024

முச்சந்தி முரளி



“உந்த இணக்கம் சிலருக்கு வயித்தில புகைச்சலை வரவைக்கும் கண்டியளோ”



## மடு வீதியில் விபத்து: ஒருவர் பரிதாபச் சாவு

மன்னார், ஜூன் 30

மன்னார் - மடு பிரதேச செயலர் பகுதியில் உள்ள இரண்டாம் கட்டைப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில், ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் இன்னொருவர் படுகாயமடைந்துள்ளார். 15

## மாங்குளம் விபத்து: மேலும் ஒருவர் பலி

முல்லைத்தீவு, ஜூன் 30

முல்லைத்தீவு - மாங்குளத்தில் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந்தவர்களில் ஒருவர் சிகிச்சையின்போது 15

## இலங்கையைச் சூழ மரணப் பொறிகளே!

### வரி அதிகரிப்பு மட்டுமே ரணிலின் தீர்வு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விளாசல்

கொழும்பு, ஜூன் 30

ஒரு நாடாக நாம் பல பாரதூரமான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறோம். எல்லாப் பக்கங்களிலிருந்தும் பல்வேறு வகையான பொருளாதார மரணப் பொறிகளில் சிக்கித் தவித்து வருகிறோம். வரிகளை அதிகரிப்பதே இவ்வாறான பிரச்சினைகளுக்கான அரசாங்கத்தின் தீர்வாக அமைந்துள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். 15

ஜனாதிபதித் தேர்தல்

## பொதுக்கட்டமைப்பு ஊடாக பொதுவேட்பாளர் நிறுத்தம்!

### கட்சிகள், சிவில் அமைப்புகள் இணக்கம்

**வவுனியா, ஜூன் 30**

**ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு கட்சிகளுக்கும், சிவில் அமைப்புகளுக்கும் இடையில் நேற்று இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.** 15

## ஜனாதிபதித் தேர்தலுக்கு உடனடியாகத் தயாராகுக!

### அரச நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகுமாறு அரச அச்சகம், பொலிஸ், இலங்கை மின்சாரசபை, நீர்வழங்கல் சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் கடிதம்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான அதிகாரிகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பான புள்ளிவிவர அறிக்கையைத் தயாரிக்குமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்குச் 15



## இரணைமடுவில் நீராடிய சிறுவன் நேற்று மாயம்!

தேடும் பணிகள் தீவிரம்

விரிவு :- பக். 15

## பாலகி மீது தாக்குதல்!

முன்பள்ளி ஆசிரியர் மீது பொலிஸில் முறைப்பாடு

விரிவு :- பக். 15

இதுவரை 215.605 மில்லியன் சதுர மீற்றரில்

## வடக்கு - கிழக்கில் கண்ணிவெடி அகற்றம்!

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் 215.605 மில்லியன் சதுர மீற்றர் நிலப் பரப்பளவில் இதுவரை கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் கே.ஏ.என்.ரசிககுமார தெரிவித்துள்ளார். 15

## கடன் மறுசீரமைப்பு ஜூலை 2 விவாதம்

### ரணிலும் விசேட உரை



கொழும்பு, ஜூன் 30

இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பாகவும், ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் 15

## நிரந்தரத் தீர்வு தரும்வரை போராட்டங்கள் தொடரும்!

### கல்முனை வடக்கு சிவில் அமைப்புகள் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 30

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என்று கல்முனை வடக்குப் பிரதேச அனைத்துச் சிவில் 15

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலத்த காற்று மீனவருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 30

கடலுக்குச் செல்லும் மீனவர்களும் கடல்சார் ஊழியர்களும் அவதானத்துடன் கடற்றொழில் நடவடிக்கைளில்ஈடுபடுமாறு வளிமண்டலவியல்திணைக்களத்தின் இயற்கை அபாயங்கள் முன்னெச்சரிக்கை மையம் எச்சரித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை நிலை காரணமாக அரபிக் கடற்பகுதியில் மணிக்கு 80 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்தகாற்று வீசக்கூடும். கடல் கொந்தளிப்பாகவும் இருக்கும்.

எனவே கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள், கடற்பகுதிகளில் வசிப்பவர்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் இயற்கை அபாயங்கள் முன்னெச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# 7 பங்காளிகள் ரணில் பக்கம்!

## நிர்க்கதியில் பெரமுன

**கொழும்பு, ஜூன் 30**

**கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியுடன் கூட்டணி வைத்திருந்த ஏழு பங்காளிக்கட்சிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வளைத்துப் போட்டுள்ளார்.**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப் போவதாக இந்தக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி (கருணா), முற்போக்கு தமிழர் கழகம் (வியாழேந்திரன்), சுதந்திரக் கட்சி (நிமால் சிறிபால டி சில்வா அணி) என்பனவே ஜனாதிபதி ரணிலுக்கான ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளன.

அத்துடன், முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் என்பவற்றின் எம்.பி.க்கள் சிலர்கூட ரணில் பக்கம் நிற்கின்றனர். மொட்டுக் கட்சியின் எம்.பி.க்கள் குழுவொன்றின் ஆதரவையும் ஜனாதிபதி உறுதிப்படுத்தியுள்ளார். அதேவேளை, மொட்டுக் கட்சியுடன் கூட்டணி வைத்திருந்த தேசிய சுதந்திர முன்னணி, பிவிருது ஹெல உறுமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, யுத்துகம அமைப்பு என்பனவும் மொட்டுதரப்பை கைவிட்டு புதிய கூட்டணியை அமைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

# புதிய மீன்பிடி சட்டவரைவு; கடல்வளத்தை அழிக்கும்!

## தேசிய மீனவ இயக்கம் எதிர்ப்பு

மன்னார், ஜூன் 30

கொண்டுவரப்படவுள்ள புதிய மீன்பிடிச் சட்டவரைவானது மீனவர்களை அச்சுறுத்துவதுடன் எமது கடல்வளத்தைச் சிதைக்கும். எனவே குறித்த சட்ட வரைவு நடைமுறைப்படுத்தப்படக்கூடாது.

-இவ்வாறு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேமன்குமார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை- இந்திய அரசு கச்சதீவு விடயம் குறித்து இரு நாட்டு மீனவர்களையும் பாதிக்கின்ற வகையில் செயற்பட்டுவருகின்றது.

புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள மீனவர்களின் உத்தேச சட்டவரைவின்படி வெளிநாட்டுப் படகுகளும் இலங்கைக் கடற்பரப்பில் வந்து கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்திய மீனவர்கள் சட்டரீதியாக இலங்கைக் கடற்பரப்பினுள் மீன்பிடிக்கக் கூடிய நிலை ஏற்படும்.

இதனால் எமது கடல் வளம் சிதைக்கப்படும். இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும் எமது நாட்டுக்கு ஓர் இறையாண்மை மற்றும் சுய ஆட்சி போன்றவை உள்ளன. அவற்றைச் சர்வதேசமும் கடைப்பிடிக்கவேண்டும் - என்றார். (ச-56)

# பாலித ரங்கே மகன் கைது

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் பாலித ரங்கே பண்டாரவின் மகன் யசோத ரங்கே பண்டார வாகன விபத்து சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யசோத ரங்கே பண்டார பயணித்த கார் வீதியை விட்டு விலகி முச்சக்கர வண்டியுடன் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. முச்சக்கரவண்டி சாரதி படுகாயமடைந்து புத்தளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-இ)

# ரஷ்ய - உக்ரைன் போர் இலங்கையருக்கு இழப்பீடு

கொழும்பு, ஜூன் 30

ரஷ்ய - உக்ரைன் மோதலில் கொல்லப்பட்ட இலங்கையர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்களில் இலங்கை மற்றும் ரஷ்ய தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

வெளியுறவு இராஜாங்க அமைச்சர் தலைமையிலான குழுவினர் ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

ரஷ்ய- உக்ரைன் மோதலில் இதுவரை 17 இலங்கையர்கள் கொல்லப்பட்டுள்ளனர், பலர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. ரஷ்ய இராணுவத்தில் ஆயிரம் இலங்கையர்கள் இணைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25-6)

# கைதி சாவு

கொழும்பு, ஜூன் 30

காலி சிறைச்சாலையில் சக கைதிகளால் தாக்கப்பட்டு கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று காலி பொலிஸார் தெரிவித்தனர்.

காலி, பலகொட பிரதேசத்தைச் சேர்ந்த கைதியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டவராவார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# கடன் மறுசீரமைப்பில் வெற்றி; 17 பில்லியன் டொலர் குவியும்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

இருதரப்புக் கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்புச் செயல்முறை வெற்றியடைவதன் மூலம் இலங்கைக்கு சுமார் 17 பில்லியன் அமெரிக்க டொலர் நன்மைகிடைக்கும் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணயநிதியத்துடனான ஒப்பந்தத்தில், கடனை மறுசீரமைக்குமாறு எமக்குத் தெரிவிக்கப்பட்டது. நாம் முதலில் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்தோம். இதுவரை இருதரப்புக்கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முடித்துள்ளோம்.

கடனைத் திருப்பிச் செலுத்தும் நிலை பேறான நாடாக மாறியுள்ளோம். இந்த வெற்றியின் மூலம் இலங்கைக்கு சுமார் 17 பில்லியன் அமெரிக்க டொலர் நன்மை கிடைக்கும்.



சர்வதேச பிணைமுறிகள் வைத்திருப்பவர்களுடனான பேச்சுகளை வெற்றியடையச் செய்வதற்கு இந்த வெற்றி உதவும். மொத்தக் கடன் தொகையை மொத்த தேசிய உற்பத்தியில் 95% வரை குறைக்கவேண்டும். மேலும், வெளிநாட்டுக் கடனுக்கான தற்போதைய வட்டியை மொத்த தேசிய உற்பத்தியில் 4.5% வரை குறைக்க வேண்டும் - என்றார். (ச-இ)

# கூலிப்படைக்காரர்களுக்கு ரஷ்ய பிரஜாவுரிமை

## அலிசப்ரி தகவல்

கொழும்பு, ஜூன் 30

உக்ரைனுக்கு எதிராகப் போரிடும் இலங்கையைச் சேர்ந்த கூலிப்படையினர் ரஷ்யப் பிரஜைகளாக மாறியுள்ளனர். அவர்கள் ரஷ்யப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உக்ரைன்- ரஷ்யப் போரில் இலங்கையைச் சேர்ந்தவர்களை கூலிப்படையாகச் சேர்ப்பது தொடர்பில் இதுவரை 446 முறைப்பாடு கள் கிடைத்துள்ளன .

ஆனால் அவர்கள் ரஷ்யப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இன்னுமொரு நாட்டின் பிரஜாவு ரிமையை நீங்கள் பெற்றுக்கொண்டால் இலங்கையின் பிரஜாவுரிமையை இழந்து விடுவீர்கள். நீங்கள் இலங்கைப் பிரஜை இல்லை என்பதால் உங்களின் சார்பில் பேசுவதற்கு எங்களுக்கு உரிமையில்லாது போகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# கெஹலியவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 30

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட 7 பேரை எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீராப்புப் பேசுகின்றது ஓடி ஒளிந்த எதிரணி



## மனுஷ நாணயக்கார கிண்டல்

கொழும்பு, ஜூன் 30

நாடு பொருளாதாரத்தில் வீழ்ந்தபோது ஓடி ஒளிந்த எதிர்க்கட்சிகள், நாட்டுக்காக சவால் விடும் ஒரே தலைவரின் காலை வாரிவிடுவதற்கு காத்திருக்கின்றன. மக்களை அவர்கள் நேசித்திருந்தால் வீழ்ச்சியடையும் போது ஓடியிருக்க மாட்டார்கள்,

-இவ்வாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு வருடங்களில் மாத்திரம் புலம்பெயர் தொழிலாளர்கள் சுமார் 12 பில்லியன் அமெரிக்க டொலரை நாட்டிற்கு அனுப்பியுள்ளனர்.

நாடு மீண்டும் சுவாசிக்கக்கூடிய சூழலை உருவாக்கியவர்கள் இவர்கள், பொருளாதாரத்தில் இருந்து நாடு மீண்டு வருவதை அரசியல் தளத்தில் இருக்கும் சிலர் விரும்புவதில்லை.

இந்த நாட்டை நேசிப்பவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார சவாலை ஏற்றுக்கொண்டார்.

பொருளாதார நெருக்கடியின்போது நாட்டுமக்களைநேசித்து பொறுப்புகளை ஏற்காமல் தனது நியமனங்களையும் பதவிகளையும் பார்த்துக்கொண்டன எதிரணிகள். எனவே, ஒரு நாடாகவும் தேசமாகவும் நாம் முதலில் மக்களை நேசிக்கவேண்டும்-என்றார். (ச-இ)

# இணையமோசடி உயர்வு; தேசிய பாதுகாப்பு பாதிப்பு

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 30**

**இலங்கையில் இணைய மோசடிகள் அதிகரித்து வரும் நிலையில், நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய பொருளாதாரத்தில் அவை தாக்கம் செலுத்தியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு நாட்டவர்களின் சட்டவிரோத இணைய நிதி மோசடி, நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய பொருளாதாரத்தைப் பாதித்துள்ளது.

இணையத்தில் மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள் கணினிக் குற்றங்கள் என்ற பிரிவின் கீழ் வருவதால் அவை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள ஆடம்பர வீடுகளில் தங்கியிருந்து ஒன்லைன் சூதாட்டத்தில் ஈடுபட்டு நிதி மோசடியில் ஈடுபட்ட 137 இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலா விசாவில் மேலும் பல இந்திய பிரஜைகள் நாட்டில் தங்கியுள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவர்களில் பலர் வீடுகளை வாடகை அடிப்படையில் வாங்கி மோசடிகளில் ஈடுபட்டுள்ளமையும், பல்வேறு குற்றத்துக்குப் பயன்படுத்தியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் தடை செய்யப்பட்ட சூதாட்ட இணைய பக்கம் நாட்டில் இருந்து இயக்கப்பட்டு வருவதும், இந்திய நாட்டவர்களுடன் தொடர்பு கொண்டு கோடிக் கணக்கில் சூதாட்டம் விளையாடுவதும் தெரியவந்துள்ளது.

எனவே ஒருவருக்குச் சொந்தமான வீட்டை வாடகைக்கு விடப்பட்டாலும், அந்த வீட்டை வாடகைக்கு எடுப்பவர்கள் என்ன வகையான வேலையில் ஈடுபட்டுள்ளனர் என்பதைக் கண்டறியும் பொறுப்பு உரிமையாளருக்கு உள்ளது-என்றார். (ச-இ)



மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றி வந்த எல்.வை.ஏ.எஸ். சந்திரபால, மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடந்த வியாழக்கிழமை பதவி உயர்வு பெற்றுள்ளார். (ப)


# மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 09 . 1953



மறைவு
29 . 06 . 2024

## செல்லத்துரை கணநாதன்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை கணநாதன் நேற்று (29.06.2024) சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலம்சென்றவர்களான இராசரட்ணம் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், வசந்தகுமாரி அவர்களின் அன்புக் கணவனும், காலம்சென்ற சகுந்தலாதேவி மற்றும் மனோன்மணி, பாலச்சந்திரன், இராசலிங்கம், பத்மநாதன் செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயபிரதா, வகிதா, கரிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமேஸ்கரன் (கிருஸ்ணா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - கொழும்பு) நிதர்சன் ஆகியோரின் அன்பு மாமனும், காசினி ,அஸ்வினா ஆகியோரின் பேரனும், காலம்சென்றவர்களான கார்த்திகேசு (மனேச்சர்), ஞானசூரியன், மற்றும் வசந்தா, செல்வநாயகி, உருத்திராம்பிகை, தனபாலசிங்கம், காலம்சென்ற சரசமலர் (ராசாத்தி), புஸ்பகலாராணி (கலா - அவுஸ்ரேலியா), பவானந்தராணி (மணி), மகேந்திரராஜா (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனரும், சாந்தலிங்கம் (தம்பு), கிருஸ்ணபாலன் (அவுஸ்ரேலியா), ஆனந்தரூபன் ஆகியோரின் சகலனும், சிவகுருநாதனின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 829 1684
077 167 8792

புளியங்கூடல் தெற்கு.

(CS/55539) J-1



# மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 06 . 1933



மறைவு
27 . 06 . 2024

## நாகலிங்கம் அன்னம்மா

சாவகச்சேரி கச்சாயைப் பிறப்பிடமாகவும் கெற்பேலி மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அன்னம்மா கடந்த (27.06.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், விசுவர் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், சண்முகநாதன், கமலாதேவி, மல்லிகாதேவி (அமெரிக்கா), பத்மநாதன், ஜெகநாதன் (அவுஸ்திரேலியா), ஜெகதீஸ்வரன், ரங்கநாதன் (பிரான்ஸ்), குருபரநாதன் (லண்டன்), காலஞ்சென்ற குணராசா, யோகநாதன், நிர்மலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இராசையா, திலகவதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவக்கொழுந்து, பொன்னுத்துரை, முருகேசு ஆகியோரின் மைத்துனியும், தயாபதி, நவரத்தினம், சொக்கலிங்கம் (அமெரிக்கா), குணராசவதனம், முத்துப்பிள்ளை (அவுஸ்ரேலியா), சிவமதி, பிரியதர்சினி (பிரான்ஸ்), கீதாஞ்சலி (லண்டன்), சத்தியசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், பிரதீபன் - ரஞ்சினி (அவுஸ்ரேலியா), பிரசாத் - தாட்சாயினி, ஜெயராணி - சிவநாதன் (சுவிஸ்), ஜெயசுதன் - தர்சி, ஜெயந்தினி - இளந்திரையன், நடேஜினி - ஜெயசுதன் (பிரான்ஸ்), ஜெயசீலன், டிசாந்தன் (அவுஸ்ரேலியா), கோபிநாத் - மதுமிதா (அமெரிக்கா), சுயந்தன், சுபாசன் (அவுஸ்ரேலியா), கிருத்திகா (கனடா), சுலோதிகா - அருள்பிரகாஷ் (சுவிஸ்), பிரணவன், மிர்ணாளினி - கார்லொஸ் (அவுஸ்ரேலியா), மிதுஷா (அவுஸ்ரேலியா), கஜானி, ஆர்த்திகா, அபிநயா, சாருகா (பிரான்ஸ்), நிதுஷன், நிலேஷ் (லண்டன்), அபிதாப் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கதிரினி, சுஜிர்தனா, ஜசிர்தனா, ஆசித், ஆரண்யா, ஷாருன்யா - தினுசன், தரண்யா, சாருஷன், தர்சிகன், கீர்த்திகன், பார்த்திகன், ஆருஷா, அக்சயன், அபிசன், நிவிஷா, ஹிருஸ்ணி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2024) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விடத்தற்பளை சம்பாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 844 8752
076 435 4279

தகவல்:
குடும்பத்தினர்

(CS42731) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# றைனோஸ் கரப்பந்து பிறீமியர் லீக் இறுதிச்சுற்று இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 30
உதயன் அனுசரணையுடனான சுழிபுரம் றைனோஸ் கரப்பந்து பிறீமியர் லீக் இறுதிச் சுற்றுப்போட்டி இன்று இரவு 7 மணிக்கு வட்டுக்கோட்டை பிளவத்தையில் அமைந்துள்ள இளைய நட்சத்திர விளையாட்டுக் கழக மைதானத்தில் பிரமாண்டமாக நடைபெற வுள்ளது.

இறுதிச்சுற்றில் விசி கிங்ஸ் அணியும் யங் ஸ்டார் அணியும் மோதவுள்ளன.

கழகத்தின் தலைவர் எஸ்.உதயராஜ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ச-125)

## தொழில்நுட்பக்கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 30
தொழில்நுட்பவியல் கல்லூரியில் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதான வெளிக்கள பயிற்சியுடன் கூடிய பராமரிப்பாளர், மொபைல் போன் றிப்பயறிங், சோலர் பிவி சிஸ்ரம் இன்ஸ்ரோலர், கணிய அளவை உதவியாளர், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் பழுது பார்த்தல், ஆடை தைத்தல் தொழில்நுட்பம், அலுமினியம் பொருத்துநர், கணினி வலையமைப்புக்கான சான்றிதழ் போன்ற என்.வி.கியூ. மட்டம் 4 ஆம் தர இலவசக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பயில விரும்புபவர்கள், 'பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு விண்ணப்பிக்கு மாறும் மேலதிக தகவல்களுக்கு 0212220028 அல்லது 02122 12358 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் கண்ண காம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள் ளன. மஹோற்சவக் கிரியைகளை சிவஸ்ரீ கதிர்கிருஷ்ணேஸ்வரக்குருக்கள் மற்றும் பிரம்மஸ்ரீ சோ.விக்னேஸ்வரக் குருக்கள் நடத்திவைப்பார்கள். (ச-25)

◊ ◊ ◊ ◊ ◊ ◊

யாழ்ப்பாணம், ஜூன் 30
புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரம் பிட்டி யம்பதி அருள்மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் மஹோற்சவம், எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்தும் 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு கும்பபூசையைத் தொடர்ந்து, மு.ப. 10 மணிக்கு இரதோற சவமும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்குத் தீர்த்த உற்சவமும், இரவு கொடியிறக்கமும் இடம்பெறும். (ப)

## மஹா கும்பாபிஷேகம்

சுன்னாகம், ஜூன் 30
மருதனார்மடம், இணுவில் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்ச நேயர் கோவிலில் கருங்கல்லினாலான புதிதாக அமைக்கப் பெற்ற சந்நிதானத்தில் சனீஸ்வர பிரதிஷ்டா மஹா கும்பாபி ஷேகம், எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும். (ப)



'ஜனசதுசேவா' ரி-20 கிரிக்கெட் தொடரில் அபிவிருத்தி லொத்தர் சபை கிரிக்கெட் அணி இரண்டாவது இடத்தை வென்றது. அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் அஜித் குணரத்ன, நாரகல மற்றும் பொது முகாமையாளர் அனுர ஜயரத்ன ஆகியோருக்கு இரண்டாம் இடத்துக்கான கிண்ணம் வழங்கி வைக்கப்பட்டது. (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் சில பிரச்சினை ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். இலாபம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச் சலைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். சிரமங்களைக் குறைத்துக்கொள்ளலாம்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளப்படும். வியாபாரத்தில் போட்டியாளர்களின் தொல்லை நீங்கும்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். சங்கடங்கள் நீங்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். முக்கியமான பிரமுகர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்** : புதிய முயற்சிகளில் ஈடுபடுவ தைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தி னரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போல நடைபெறும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரம் செலவுகளும் அதிகரிக்கும். காரியம் முடிவது இழுபறியாகும். நல்ல தகவலால் மகிழ்ச்சி அடைவீர்கள். திருப்பம் ஏற்படக்கூடும். அம்பிகையை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். நன்மை ஏற்படும். வியாபாரத்தில் சக வியாபாரி களால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகும். பணிகளிலும் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். செலவுகள் ஏற்படும். உறவுகள் உதவி கேட்டு வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமச்சீரான உணவுப் பழக்கம் ஆரோக்கிய சந்ததிக்குத் தேவை

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஜூன் 30**

**ஆரோக்கியமான சுறுசுறுப்பான எதிர்கால சந்ததியை உருவாக்க சமச்சீரான உணவுப்பழக்கத்தை பிள்ளைகளுக்கு ஏற்படுத்தவேண்டும் என்று பூநகரி பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.**

'சேவ் தி சில்ரன்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் காலையுணவு வழங்கும் திட்டம் கிளிநொச்சியில் அண்மையில் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தானியங்கள், மாச்சத்து, மரக்கறி, பச்சையிலைகள், பழங்கள், பால், பாற்பொருள்கள், விலங்குணவுகள், பருப்பு வகை மற்றும் எண்ணெய் வகைகள் அமைந்த ஆறு உணவுக்கூட்டங்களில் நான்கு கூட்டங்களிலிருந்தாவது தெரிவுகளை மேற்கொண்டு காலையுணவு தயாரிக்கப்படவேண்டும்.

இந்த உணவு பாதுகாப்பான சமையல் அறையில் சுகாதாரமான உணவு கையாளுபவரால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படவேண்டும்.

பிள்ளைகளின் உடல் மற்றும் மூளை வளர்ச்சியும் விருத்தியும் அதிகமாக உள்ள ஆரம்பக்கல்வி கற்கும் வயதில் போதிய ஊட்டச்சத்துகள் கிடைக்காதுவிடின் உடல்வளர்ச்சி மட்டுமன்றி மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படலாம்.

சமச்சீரான உணவு உடலுக்குத் தேவையான நோய் எதிர்ப்பு சக்தி அளிக்கிறது. குறிப்பாக ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருந்தாலும் இந்த சமநிலையான உணவுப் பழக்கம் கைகொடுக்கும் - என்றார். (ச-25-100)




# சமாதான நீதிவான்களுக்கு ஒழுக்க விதிகள் அறிமுகம்



கொழும்பு, ஜூன் 30

சமாதான நீதிவான்களை நியமித்தல், இடைநிறுத்துதல், இரத்துச் செய்தல் மற்றும் நடத்தைக் கோவையில் சேர்க்கப்பட்ட இரண்டு ஒழுங்குவிதிகளுக்கு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

சமாதான நீதிவான்களுக்கிடையே உயர் தரத்திலான ஒழுக்கவியல் நடத்தையை ஊக்குவித்தல் மற்றும் ஊழல் செயல்முறைகளுக்கான வாய்ப்புகளை இல்லாதொழித்தல் என்பவற்றின் மூலம் வினைத்திறனான நீதி நிர்வாகத்தை வலுப்பெறச்செய்தல் இதன் குறிக்கோளாகும். அத்துடன், அந்தப் பதவியை முறைகேடாகப் பயன்படுத்தும் போது அந்த நபர்களை சமாதான நீதிவான் பதவியிலிருந்து இரத்துச் செய்வதற்கு உரிய முறைமையொன்று காணப்படாமை காரணமாக இந்த ஒழுங்குவிதிகள் வெளிப்பட்டன என்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார். (ச-இ)

பலஸ்தீனத்துக்கு ஆதரவு

# தமிழர், முஸ்லிம்கள் சிங்கப்பூரில் கைது

சிங்கப்பூரில் பலஸ்தீனத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த தமிழர்கள், முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 70 பேர் சிங்கப்பூர் நாடாளுமன்றத்துக்கு பலஸ்தீன கொடியை அடையாளப்படுத்தும் வகையில் வத்தகப்பழத்தின் படம் பொறிக்கப்பட்ட குடையுடன் ஊர்வலமாக பிரதமர் அலுவலகத்தை நோக்கிச்சென்றடைந்து, சிங்கப்பூர் அரசாங்கம் இஸ்ரேலுடனான உறவைத் துண்டிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

சிங்கப்பூர் நாட்டின் சட்டப்படி வெளிநாடுகளுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம், ஊர்வலம் நடத்தத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஊர்வலத்தை ஏற்பாடு செய்த அண்ணாமலை கோகிலபார்வதி, சித்தி அமிரா மொகமட், மொசாமட் சோபிகுன் நாஹர் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இவர்கள் மூவருக்கும் 7300 அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்படலாம் அல்லது ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்று சிங்கப்பூர் சட்டவல்லுநர்கள் தெரிவித்தனர். (ச-22-6)



மாணவர்களின் நலன்கருதி சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அன்பளிப்பாக 4 மின்விசிறிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. ஜெ. டினேஸ் இன் ஏற்பாட்டில் அத்தியடியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் கே. சபாநாதனின் ஊடாக, கனடா வாழ் ஏ.சுரேன் என்பவரால் இந்த விசிறிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ச-25-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகத்தெரிவு

ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்தி சேவை நிலையத்தின் கீழுள்ள கற்சிலைமடு கிராம கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத்தெரிவு தற்காலிக முகாமை உதவியாளர் சுலோசனா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. புதிய தலைவராக இ.தனபாலசிங்கம், உபதலைவராக சி.நந்தகுமார், செயலாளராக லோ.துஷ்யந்தன், உப செயலாளராக ந.பொன்னையா, பொருளாளராக கோ.விசயன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ச-25-500)



## விற்பனைக்கு

**நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன் காரணம் என்னிடம் அதிகமாக இருப்பதனால் அல்ல இல்லாதவர்களின் வலியைப் புரிந்து கொண்டதனால்.**

- யாழ் வைத்தியசாலை வீதியில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக வைத்தியசாலை முகப்புடன் 14அடி அகலமும் 100அடி நீளமும் கொண்ட 3 கடைகளும், வைத்தியசாலைக்கு முன்பாக 6 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
- யாழ் வைத்தியசாலை வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 20அடி அகலமும் 200அடி நீளமும் கொண்ட காணித்துண்டு விற்பனைக்குண்டு.
- யாழ் கொட்டடியில் வைரவர் கோயில் வீதியில் 6பரப்புக் காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு.
- யாழ் பலாலி வீதியில் பேபி போட்டோவுக்கு அண்மையில் 3பரப்பு, 3 1/2 பரப்பு, 4பரப்பு காணிகளில் அமைந்த காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
- யாழ் சிவன்கோவிலுக்கு முன்பாக K.K.S வீதி முகப்புடன் 5பரப்புக் காணியும், யாழ் மின்சார நிலையவீதியில் 3பரப்பு, 4பரப்பு, 5பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.
- யாழ் திருநெல்வேலிக்கு அண்மையில் ஆடியபாதம் வீதியில் 5பரப்புக் காணி விற்பனைக்கு.
- யாழ் பிறவுண் விதியில் 2பரப்பில் அமைந்த புதிய மாடி வீடும், 3பரப்புக் காணி சுற்றுமதிலுடன் கூடிய துண்டும், 5பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
- யாழ் கைலாசபிள்ளையர் கோயிலுக்கு அண்மையில் 3பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- யாழ் மின்சார நிலையவீதியில் பழைய தபால்கந்தோர் வீதியில் 4பரப்பும், 7குழியும் கொண்ட காணியும், 9பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.
- கொழும்பு வெள்ளவத்தையில் விவேகானந்தா வீதியில் 6பேர்ச்சில் அமைந்த மாடி வீடும் விற்பனைக்குண்டு.
- யாழ் மின்சாரநிலைய வீதி முதலாம் ஒழுங்கையில் 1 1/2பரப்பில் அமைந்த காணியும் வீடும் விற்பனைகுண்டு.
- யாழ் மின்சாரநிலையவீதி இரண்டாம் ஒழுங்கையில் 2பரப்பில் அமைந்த காணித்துண்டு விற்பனைக்குண்டு.
- யாழ் விக்டோரியா வீதியில் 12பரப்புக் காணியும், 16பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
- யாழ் பிறவுண்வீதியில் முதலாம் ஒழுங்கையில் 2பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- யாழ் வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள காந்தி வீதியில் 4 3/4பரப்புக் காணி விற்பனைக்குண்டு.


(CS 846) S-1

தொடர்புகளுக்கு:
**077 723 2535**

கனகசபை தர்மகுலசிங்கம்
இல - 185, மின்சார நிலையவீதி
இல - 183 காலி வீதி, வெள்ளவத்தை


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
02 • 09 • 1961



உதிர்வு
23 • 06 • 2022

### அமரர் நடேசபிள்ளை மணிசேகரம்


மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத ஈராண்டு நினைவுகளுடன்
உதிரும் கண்ணீரப் பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்த்
துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

என்றென்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

(cs 55543) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 • 08 • 1960



மறைவு
25 • 06 • 2024

### பத்தன் பரமன்

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் ஜேர்மனை வசிப்பிடமாகவும் கொண்ட பத்தன் பரமன் கடந்த (25.06.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்தன்-கதிரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தன்-கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் பாக்கியவதி அவர்களின் அன்புக் கணவரும் சுகுமாறன் (ஜேர்மனி), சங்கீதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பசுபதி (ஜேர்மனி), பாக்கியநாதன் (மன்னார்), லீலாவதி (ஜேர்மனி), சரஸ்வதி (சுவிஸ்), தனலட்சுமி (நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலை உத்தியோகத்தர்) காலஞ்சென்ற தில்லைநாதன் (ஜேர்மனி), இராமநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பூபதி, ஏகாம்பரம் (ஊர்காவற்றுறை பிரதேச வைத்தியசாலை-ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்), தர்மவதி, தவக்குமார் (மந்திகை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் லோகநாதன் பிரதீபன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரும் அக்ஷய் (பிரான்ஸ்), அஜய் (பிரான்ஸ்), அஸ்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இந்திராபுரம்-பளையில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இந்திராபுரம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல 67 இந்திராபுரம்
பளை
தொடர்பு: 077 192 7199
074 064 8701
077 283 0313

தகவல்: குடும்பத்தினர்.
மனைவி-மலர்
மகன்-சுகுமாறன் (ஜேர்மனி)
மகள்-தீபன் சங்கீதா (பிரான்ஸ்)

(CS 5546) V-1



வலி. கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தை சங்க வேலை நாட்களில் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 10.00 இனை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் யாவும் **"தலைவர் வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக்கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி"** என்ற முகவரிக்கு 16.07.2024ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

### பதவிப் பெயர் :- கணக்காளர் (01)

சம்பள குறியீட்டு இல :- 104/09 (கூ.வே.ஆணைக்குழுவின் சு.நி.இல.02/2022இன்படி)
சம்பள அளவுத்திட்டம் :- 20200-25300 / 250X10-260X10 (சு.நி.இல.02/2022இன்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகுதி :**

1. கூட்டுறவு ஊழியர் 10ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர் / உள்ளகக் கணக்காளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 11வது சம்பளத்திட்டத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் / கணக்கு பதிவாளர் கணக்கு / கணக்காய்வு இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது 04ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

2. இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/. இதற்கு சமனான தகைமை/மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NCDI) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

**அல்லது**

3. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு தொடர்பான 03ஆண்டு கால அனுபவம்./ க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்.

### பதவிப்பெயர் :- தொழிலாளி (03)

சம்பளக் குறியீட்டு இல :- 318/17(சு.நி.இல.02/2022 இன்படி)
சம்பள அளவுத்திட்டம் :- 16515-19265/130X10-145X10 (சு.நி.இல.02/2022)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமை :-**

05ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்

**பொதுவானது**

1. ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச்சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.
2. வயதெல்லை 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

மேலதிக தொடர்புகளுக்கு :- **076 711 1168 / 077 923 2462**

தலைவர்,
வலி. கிழக்கு வாழைக்குலை
உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்,
நீர்வேலி.

(cs.55538) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# ஒரு தீவின் ஓலம்!

புவியின் வெப்பநிலையைக் குறைத்து இயல்பு நிலையை ஏற்படுத்துவதில் மேற்குநாடுகள் அக்கறையின்றிச் செயற்படுகின்றன என்று வெளிப்படையாக விமர்சித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. உக்ரைன்- ரஷ்ய மோதலிலும், காஸா மோதலிலும் 100 பில்லியன் டொலருக்கும் மேற்பட்ட நிதி விரயமாக்கப்பட்டிருக்கையில், இந்தத் தொகையை ஆபிரிக்க நாடுகளின் கடன்களை மறுசீரமைத்து, அந்த நாடுகளை காலநிலை சீரமைப்பு சுற்றோட்டத்தில் உள்ளீர்த்துக் கொள்ளப் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் ஜனாதிபதி ரணில் அறிவுறுத்தியிருக்கின்றார்.


உலகளாவிய போர்ப்பதற்றம், காலநிலை தொடர்பில் வல்லரசுகள் கொண்டிருக்கும் அசமந்தப் போக்கு மற்றும் பொருளாதாரச் சமநிலையற்ற வளப்பகிர்வு என்பன தீவு நாடுகளின் ஆயுளையும், வறிய நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பையும் 'முற்றாகத் தீர்மானித்துக்கொண்டிருக்கும்' நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த உரை மெச்சப்பட வேண்டியும் பாராட்டப்பட வேண்டியது மாகும். போர்களாலும், மேற்கத்தேய நாடுகளின் பொருளாதர்ரநகர்வுகளாலும் புவி வெப்பமடைந்து தீவுநாடுகளின் இருப்பு மெல்லமெல்ல மரணப் படுக்கையை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கும் பின்னணியில், தீவுநாடுகளின் இருப்பை உறுதிசெய்வதற்கான கோரிக்கையை குனிந்து - வளைந்து-மன்றாடி முன்வைத்துக் கொண்டிருக்காமல், உலக வல்லரசுகளுக்கு எதிராக விரல் நீட்டியிருக்கும் 'கெத்துக்காக' ரணிலை எத்தனை பாராட்டினாலும் அது தகும்.

ஆனால், ஒரு தீவு நாட்டின் தலைவராக அழிவின் ஆபத்தம்சங்களை எதிர்கொண்டிருக்கும் தீவுதேசங்களின் பிரதிநிதியாக இலங்கையின் தார்மீக கோபத்தை, எவ்வளவுதூரம் சர்வதேசம் கண்டு கொள்ளப் போகின்றது என்ற கேள்வியும் இங்கே எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. ஏனெனில் அதிவேகத்தில் மாறிவரும் பருவநிலை மாற்றத்துக்கு எதிராக பணபலம் கொண்ட வல்லாதிக்க நாடுகள் இதுவரை காத்திரமான நடவடிக்கைகளுக்கான ஆரம்பப் புள்ளியைக்கூட கண்டடையவில்லை என்பதே உண்மை. கார்பன் வெளியேற்றத்தாலும், பூமியை அதன் இயல்பு நிலையில் இருந்து கொஞ்சம்கொஞ்சமாக மாற்றுவிக்கும் சமூக விரோதச் செயற்பாடுகளாலும் மனிதகுலம் தன் இருப்பையே தொலைத்து வருகின்றது. இலங்கையின் குரலுக்கோ அல்லது இதர தீவு நாடுகளின் குரலுக்கோ கார்பனை அளவுகடந்து வெளியேற்றும் வல்லரசுகள் செவிசாய்க்கும் என்ற நம்பிக்கை தீவு தேசங்களிடம் கொஞ்சமும் இல்லை.

ஏனெனில், பிரிட்டனின் முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சனால் கொண்டுவரப்பட்ட பல்வேறுபட்ட காலநிலைச் சீர்திருத்தங்கள், தற்போதைய பிரதமர் ரிஷி சுனக்கால் தூக்கியெறியப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமாவால் கையொப்பமிடப்பட்ட பரிஸ் ஒப்பந்தத்தில் அமெரிக்கா தொடருமா? அல்லது வெளியேறுமா? என்பது நவம்பர் மாதம் 5ஆம் திகதி இடம்பெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுடன்தான் முடிவாகவுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில், ஜனாதிபதி ரணிலின் உரையும் அதில் சுட்டப்பட்டுள்ள விடயங்களும், 'அமிழ்ந்து கொண்டிருக்கும் கப்பலுக்குள்ளிருந்து பீறிட்டுப் புறப்பட்ட ஆபத்தழைப்பே'. அதற்குச் செவிசாய்க்க வேண்டியது வல்லரசுகளுக்கு முன்னுள்ள பெரும் பொறுப்பாகவும் காணப்படுகின்றது.



# விசேட கொடுப்பனவு; ரூ.11.6 பில். விடுவிப்பு



**கொழும்பு, ஜூன் 30**
**'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் கீழ் 2024 ஜூன் மாதத்துக்கான இடைநிலை மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளின் கீழான விசேட கொடுப்பனவுகளை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்வதற்காக நலன்புரி நம்பிக்கைச்சபை 11.6 பில்லியன் ரூபாவை விடுவித்துள்ளது.**

தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு 'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப்பனவுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட மற்றும் இடைநிலை பாதிப்புக்களை எதிர்கொண்ட பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான விசேட கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.
இதற்கான காலத்தை இந்த வருடத்தின் டிசெம்பர் மாதம் வரையில் நீடிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.
அதன் கீழ் ஜூலை முதல் டிசெம்பர் வரையில் 5000 ரூபா விசேட கொடுப்பனவை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நலன்புரி நன்மைகள் சபையின் தலைவரும் ஆணையாளருமான ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார். (ச-இ)

## சீனாவுடன் கடன் ஒப்பந்தம் விவரத்தை வெளிப்படுத்துக

### பரிஸ் கிளப் வேண்டுகோள்

சீனாவுடன் செய்து கொண்ட கடன் மறுசீரமைப்பு பற்றிய விவரங்களை வெளிப்படுத்துமாறு ஏனைய கடன் வழங்கும் நாடுகள் இலங்கையிடம் கோரியுள்ளன. அமெரிக்கா, கனடா, இந்தியா, ஜப்பான் உட்பட ஐரோப்பிய நாடுகள் சிலவும் பரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்கின்றன. பரிஸ் கிளப் நாடுகள் 5.8 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்புக்கு கடந்த புதன்கிழமை இணங்கியிருந்தன.
அதே நாளில் சீனாவும் 4.2 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்புக்கு இணங்கியது. சீனாவுடன் செய்து கொண்ட கடன் மறுசீரமைப்புப் பற்றிய விவரங்கள் அவசியமானவை என அந்த நாடுகள் கேட்டுள்ளன. (ச-25,6)

## பணவீக்கம் உயர்ந்தது

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம், கடந்த மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூன் மாதத்தில் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.
மே 0.9 வீதமாக பதிவாகிய கொழும்பு நகர சமூகத்தின் நுகர்வோர் பணவீக்க விகிதம் ஜூன் மாதத்தில் 1.7 வீதமாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
மேலும் ஜூன் மாதத்தில், உணவு வகையின் வருடாந்திர பணவீக்கம் 1.4 வீதமாக அதிகரித்துள்ளது, இது கடந்த மே மாதத்தில் 0.0 வீதமாகப் பதிவாகியிருந்தது.
உணவு அல்லாத வகையின் வருடாந்திர பணவீக்கம் 1.8 வீதமாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அமெரிக்கப் பிரதிநிதி இலங்கை வருகை

கொழும்பு, ஜூன் 30
அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவிச்செயலர் றொபேர்ட் கப்றோத் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.
அவர் தனது பயணத்தின் போது அரசியல், பொருளாதார, நிதித் துறையினருடன் இலங்கையின் பொருளாதார மீட்சி பற்றி கலந்துரையாடவுள்ளார். பொருளாதாரஸ்திரத்தன்மைக்கு வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் என்பன அவசியம்என்பதுபற்றியும் இவர் வலியுறுத்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

## புதிய மின்சாரச் சட்டம் நடைமுறையானது

கொழும்பு, ஜூன் 30
சபாநாயகரால் அங்கீகரிக்கப்பட்ட புதிய மின்சார சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுத் தெரிவித்துள்ளது.
இந்தப் புதிய மின்சார சட்ட வரைவை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன கடந்த வியாழக்கிழமை கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தியுள்ளார். (ச-இ)

**நாளை**
01.07.2024
திங்கட்கிழமை
ஆனி - 17
சுபநேரம் : 11.56 - 01.26
ராகுகாலம் : 07.26 - 08.56

**நாளொரு நல்வார்த்தை**
வாழ்க்கையை ஏமாற்ற முடியாது.
வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு புத்தகத்தின் இறுதிப் பக்கத்தில் விடை கிடையாது.
-கீர்கே கார்ட்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


सत्यमेव जयते

**Consulate General of India**
**Jaffna**

**Advt. No. JAF/ADM/578/02/2024**

The Consulate General of India, Jaffna is looking for a suitable candidate for filling up one (1) vacancy of the post of "Marketing Executive". Only Sri Lankan Nationals of age limit 35 Years with minimum Graduation level qualification can apply. Details of the vacancy and the application form are available on Consulate's web site https://www.cgijaffna.gov.in Interested candidates are requested to download the application form and submit the completed form by Post or in person to **Head of Chancery, Consulate General of India, at 14, Maruthady Lane, Nallur, Jaffna by 15th July, 2024**

# மரண அறிவித்தல்



பிறப்பு 24.01.1943 இறப்பு 28.06.2024

## தம்பையா தியாகராஜா

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியைப் பிறப்பிடமாகவும், முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா தியாகராஜா நேற்று முன்தினம் (28.06.2024) வெள்ளிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், புஷ்பராணி அவர்களின் அன்புக் கணவரும், கதிரமலை, சிவகுமார், செல்வரத்தினம், கமலாதேவி, லலிதா ஆகியோரின் மூத்த சகோதரனும், காலஞ்சென்ற சசிக்குமார் மற்றும் மதனமோகன், பிரதீபன் (கனடா), சுஜாத்தா (ஜேர்மனி), சியாமளா (பிரான்ஸ்), ஜெயரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்ஷினி, துளசி (கனடா), கரன் (ஜேர்மனி), யசிகரன் (பிரான்ஸ்), கலையரசி ஆகியோரின் அன்பு மாமனாரும், டிஷான், யனுசிகன், சசித் (கனடா), அக்ஷயன் (ஜேர்மனி), அவந்தியன் (ஜேர்மனி), தூபிகா (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
மதனமோகன் (மோகன்) - 077 421 0080
ஜெயரூபன் (ரூபன்) - 077 961 7305

இல. 46, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.


(CS/55534) J-1

## எல்லைகளை நிர்ணயிக்கவும்

ஒட்டுசுட்டான் கமநல சேவைப் பிரிவிலுள்ள கற்சிலைமடு, பெருங்கருவேப்ப முறிப்பு, சின்னக்குளம், காஞ்சூரமோட்டை ஆகிய சிறு குளங்க ளுக்கான எல்லை நிர்ணயிக்கப்படாமையால், சில நடைமுறை செயற்பாடுகளைச் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது என்று கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர். எல்லைகள் இடப்படாமையால் குளத்துக்கான எல்லைப்பரப்பை அறியமுடியாதுள்ளது. அதனால் அருகே யுள்ள காணிக்காரர்களுடன் முரண்பட வேண்டியுள்ளது. என்றும் கமக்கார அமைப்பினர் தெரிவித்தனர்.

(ப-500)

# மரண அறிவித்தல்



தோற்றம் 20.05.1978 மறைவு 29.06.2024

## கந்தசாமி கருணாகரன்

(Office for National Unity and Reconciliation - Board Member, Board of Director Lanka Leyland Limited, Prison Local Committee member at Department of Prison, Board of Director at ONUR Office National Unity Reconciliation, Former SLFP Coordinator of Colombo District)

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கருணாகரன் நேற்று (29.06.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கந்தசாமி (முன்னாள் அதிபர் - யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி) - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், மங்களநேசன் (முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர் EPDP)- ஜெசிந்தா தம்பதியரின் அன்பு மருமகனும், பிரியா (Merchant Bank - Jaffna) அவர்களின் அன்புக் கணவரும், தஷ்மிதாவின் (J/Chundikuli Girls College) பாசமிகு தந்தையும், சுரேஸ்மோகன் பிரபாஜினி (Development officer - தெல்லிப்பளை), கந்தசாமி கௌசல்யா (Liberarian - Uduvil Girls College) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுரேஸ்மோகன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேச செயலகம்) மைத்துனனும், மிதுஸ் (J/Hindu College), தருதிஷா (J/Vembadi Girls High School) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கஜேந்திரன் - ஜெயந்திமாலா (ஜேர்மனி), கிருஷாந்தன் - நுர்சியா ( NSB - Jaffna) ஆகியோரின் மைத்துனரும், ஜெயரட்ணம் கஜேந்திரன் (பொறியியலாளர் - ஜேர்மனி), சிங்கராஜர் கிருஷாந்தன் (பொறியியலாளர் - CEB) ஆகியோரின் சகலனும், கஜேஸ் (ஜேர்மனி), ஜஸ்மிரா (ஜேர்மனி), ஜஷேரா (ஜேர்மனி), சஜன் (J/Bosco School) ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2024) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 790 4014, 077 731 3287
077 804 8143, 076 919 2581

இல 43, ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(CS/55541) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடாத்தான காணிபறிப்பை தடுத்து நிறுத்தவேண்டும்

## வடக்கு ஆளுநருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்



யாழ்ப்பாணம், ஜூன் 30

பொதுப்பயன்பாட்டுக்கான சிறுவர் பூங்கா அமைக்கும் நோக்கில், சாவகச்சேரி நகரசபையால் கொள்வனவு செய்யப்பட்ட காணியை,மத்திய அமைச்சின் கீழுள்ள சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு தன்னிச்சையாக வழங்கும் செயற்பாட்டை தடுத்து நிறுத்த வேண்டும்.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடமாகாண ஆளுநருக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பி கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட நகரச்சூழலில், சிறுவர் பூங்கா ஒன்றை நிறுவவேண்டும் என்ற பொதுமக்களின் நீண்டகாலக் கோரிக்கைக்கு அமைவாக, நகரசபையின் நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட காணியில் விளையாட்டு உபகரணமும் பொருத்தப்பட்டு, அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் குறித்த காணியை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு வழங்கும் நடவடிக்கைகளில், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தன்னிச்சையாக முனைப்புக் காட்டியுள்ளார்.

சாவகச்சேரி நகர எல்லைக்குட்பட்ட மக்களின் வரிப்பணத்திலிருந்தே, நகரசபையால் குறித்த காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

நாட்டின் பொருளாதார தளம்பல் நிலை உள்ளிட்ட காரணங்களால் சிறுவர் பூங்கா நிர்மாணப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்த நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, குறித்த காணியை மத்திய அமைச்சின் கீழுள்ள சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு தாரைவார்க்கப்படுகிறது.

எனவே, இதுவிடயமாக தாங்கள் உயரிய கரிசனை கொண்டு, குறித்த காணியில் சிறுவர் பூங்கா அமைக்கும் பணிகளை துரிதப்படுத்தி அதனை பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கையளிப்பதற்கு ஆவன செய்யவேண்டும் - என்றுள்ளது. (ச-25-26-113)




# நயினாதீவு - குறிகாட்டுவானுக்கு மற்றுமொரு படகு விரைவில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

நயினாதீவு – குறிகாட்டுவான் இடையே மற்றுமொரு படகுப் பாதை சேவை, எதிர்வரும் காலத்தில் இடம்பெறும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

வரலாற்றுச்சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கு [illegible] லாப் பயணிகளின் [illegible] கைகளை கருத்திற்கொண்டு இந்த விடயம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

[illegible] வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமைச் செயலகம், புதிய படகுப் பாதையைக் கொள்வனவு செய்வதற்குரிய விலைக்கோரல்களை சம்பந்தப்பட்ட படகு நிறுவனங்களிடம் இருந்துபெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ப-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

1996 பூராடம் Management, 1997 சுவாதி BSc (Special) 1999 பூரம் (ICT) மணமகள்களுக்கு வெளிநாட்டு மணமகன்கள் தேவை. (CS/28143) J-1

077 964 9245

## வாடகைக்கு

ஓமந்தை அரச ஊழியர் வீட்டு திட்டத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தனித்தனி அறைகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். பெண்கள், சிறியகுடும்பம் விரும்பத்தக்கது.

**விற்பனைக்கு**

20 அடி நீளமான இரும்புக் குழாயினால் செய்யப்பட்ட அலுமினியத்தினாலான படிகளைக் கொண்ட சுற்றுப்படி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 076 077 0525 (CS/28420) J-1

### இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com (CS/841) J-1

# பாடசாலை மாணவர்கள் சுகவீனம் 8 பேர் மருத்துவமனையில் சேர்ப்பு

மன்னார் மடு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் தரம் 4இனைச் சேர்ந்த 8 மாணவர்கள் திடீர் சுகவீனம் காரணமாக மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களில் ஒருவர், தனது வீட்டில் எண்ணெய் எடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த ஆமணக்கு விதைகளை பாடசாலைக்குக் கொண்டுசென்று சக மாணவர்களுக்கும் வழங்கி உட்கொண்டதையடுத்தே அவர்கள் சுகவீனமடைந்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-56)

# கச்சதீவில் இந்தியா செயற்பட இலங்கை அரசும் அனுமதி!

## விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

கச்சதீவில் சில செயற்பாடுகளை இந்தியா முன்னெடுப்பதற்கு, இலங்கை இடம்கொடுத்துள்ளதாக நான் அறிகின்றேன் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் கச்சதீவு விவகாரம் தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கச்சதீவு விடயம் பல காலமாக பேசப்பட்டு வரும் விடயம். இது நாடுகளின் இறைமை சம்பந்தப்பட்ட விடயம். அவர்கள் பேசித்தான் இதனைத் தீர்க்கவேண்டும். ஆனால் கச்சதீவில் சில நடவடிக்கைகளில் இந்தியா இறங்குவதற்கு எமது நாடு இடம்கொடுத்துள்ளதாக நான் அறிகின்றேன். ஆகவே அது தொடர்பாக ஏதாவது ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ளதோ தெரியாது - என்றார். (ம-18)

## SHANTHIHAM
Association for Health & Counselling

சாந்திகம் உளவளத்துணை நிலையத்தினால் பின்வரும் பொருள்களின் விற்பனைக்கான ஏல அழைப்பு

| பொருள்கள் | எண்ணிக்கை |
|---|---|
| இயங்கு நிலையற்ற HERO HONDA SPLENDER மோட்டார் சைக்கிள் | 02 |
| GENERATOR (YANMARK) | 01 |

(CR.42722) (N-1)

05.07.2024 இற்கு முன்னர் தொடர்புகொள்ளவும்

மேலதிக தகவல்களுக்கு 076 058 8912 என்ற எண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்தவும்

இல.8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## கூரை வேலை

நவீன கூரை அல்லது சீலிங் வேலை நியாய கூலிச் செலவில் பொருட்களுடனோ, பொருட்களின்றியோ செய்து தரப்படும் (CS/55364) J-1

தொடர்பு:- 076 054 1682




## வேலைவாய்ப்பு

கல்வி சார் ஊழியர்கள்

எமது பாடசாலையில் பின்வரும் வேலைவாய்ப்பு காணப்படுவதால் தகுதியான பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். உங்கள் சுயவிபரக்கோவையையும், சான்றிதழ்களையும் **அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில்** என்ற முகவரிக்கு 05.07.2024 முன்னதாக அனுப்பி வைக்கவும்.

புவியியல் - Geography (Grade 6 - 11 English Medium)
கணிதம் - (Grade 6 - 11 Tamil Medium)

அதிபர் (CR/42726) J-1

## காணிகள் விற்பனைக்கு

சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் இருவழிப்பாதையுடன் கூடிய ஐந்து பரப்பு மேட்டுக்காணி திருமண மண்டபம், மாடிமனை, ஹோட்டல் அமைக்க ஏற்ற இடம். மற்றும் பூநகரி பொறிக்கடவையில் ஏழரை ஏக்கர் வயற்காணி பயிருடன் **விற்பனைக்கு உண்டு.** (CS/55525) J-1

077 790 5438, 021 205 3982

## பெயர் மாற்றம்

கலாசாலை வீதி, கிறீன் லேன் திருநெல்வேலி வடக்கில் வசிக்கும் **யேசு அமிர்தநாதன் யெஷரசியா** ஆகிய நான் எனது பெயரை **யேசு அமிர்தநாதன் ஜெ** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **யேசு அமிர்தநாதன் ஜெ** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS/55533) J-1 **யேசு அமிர்தநாதன் ஜெ**

## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
# அம்மன் அருள் வாக்கு

தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை
மாலை : 3.00 - 05.00 மணிவரை

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

திருமதி வே. மோகனதாஸ்

இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 071 241 1234, 021 221 1239

வெளிநாட்டவர்களும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்

+94 712 411 234 (CS/783) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 09 . 1958

இறப்பு 29 . 06 . 2024



## பாலச்சந்திரன் சர்வேஸ்வரி

யாழ். கொட்டடி ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் சர்வேஸ்வரி நேற்று (29.06.2024) சனிக்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசாமி - சுபத்திரை தம்பதியரின் அன்பு மகளும், கனகசூரியர் - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பாலச்சந்திரன் அவர்களின் பாசமிகு மனைவியும், கமல் (ஜேர்மனி), சர்மிலா (இலங்கை), மயூரன் (இலங்கை), சுதர்சன் (பாபு - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தங்கேஸ்வரன் அவர்களின் அன்புச் சித்தியும், திவாகர் (இலங்கை), ஸ்ரெபானி (ஜேர்மனி), அலக்ஸியா (பிரான்ஸ்), சசிகலா (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும், விதுசிகா, கௌதமன், கபிஷன், விதுஷன் விஷான், ரியான், ரியானா, அஸ்விக், அபிஜெய், அக்ஷியா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நாகராஜா தர்மலிங்கம், பரமேஸ்வரி சண்முகலிங்கம் மற்றும் மகேந்திரநாதன் (இந்தியா), சற்குணமூர்த்தி (மணிக்குரல்), புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி, கணேசலிங்கம் (டென்மார்க்), காலஞ்சென்ற நடேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வசந்தகுமாரி (பிரான்ஸ்), பிறேமகௌரி (கனடா), பிறேமகலா (இலங்கை), நகுலேஸ்வரன் (சூரி - சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக் காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**சுதர்சன் (பாபு - பிரான்ஸ்) மகன்**
**+94 743 517 749**

(CS/55536) J-1

# த.குமாரசாமி

## ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தின்

### அசத்தலான ஆடி மாத ஆடை தள்ளுபடி

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்

| Item | Old price (struck through) | Price |
|---|---|---|
| சாறி | 5000/= | 2000 /= |
| சாறி | 10000/= | 4000 /= |
| சாறி | 20000/= | 10000 /= |
| பஞ்சாபி | 5000/= | 2000 /= |
| பஞ்சாபி | 10000/= | 5000 /= |
| சோலிகிற் | 5000/= | 1500 /= |
| சேட் | | 750 /= |
| சேட் | | 1000 /= |
| டெனிம் ஜீன்ஸ் | | 2000 /= |



அனைத்து விதமான ஆடைத்தெரிவுகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்

**த.குமாரசாமி டெக்ஸ்டைல்ஸ்**
**44,42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.**
T.P: 021 222 88 47
E.mail: tkumarasamyvimal@gmail.com

# மரண அறிவித்தல்

பிறப்பு . 24 . 01 . 1953

இறப்பு . 26 . 06 . 2024



## இந்திராணி சிவதாஸ்

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம்)

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், ஆத்திசூடி வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராணி சிவதாஸ் கடந்த (26.06.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவனேசப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரட்ணசபாபதி - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், சிவதாஸ் அவர்களின் அன்பு மனைவியும், சஞ்சயன் (லண்டன்), ஜனார்த்தனி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - வேலணை), சாம்பவி (ஜேர்மனி), பிரணவி (இலங்கை மத்திய வங்கி - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கஜிதா (லண்டன்), கஜீரன் (இலங்கை வங்கி), புவிகரன் (ஜேர்மனி), யதுகுலன் (SGS Lanka (Pvt) Ltd) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மராணி, செல்வராணி, விஜயலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வதனி மற்றும் மகேந்திரன், இராசேந்திரம், கர்ணன், இரட்ணேஸ்வரி, இரட்ணராஜா, ஞானேஸ்வரி, பரராஜசிங்கம், மகேஸ்வரி, விமலேஸ்வரி, சடாட்சரம், ரஜனிதேவி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரிஷிகேஷன், ஹாசினி, மாதினி, அக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**41/4, ஆத்திசூடி வீதி,**
**கந்தர் மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**கணவர் - சிவதாஸ்**
**077 725 0986**

(CS/55520) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம் . 07 . 10 . 1959

மறைவு . 25 . 06 . 2024



## சுந்தரராசன் திருமணி

சுன்னாகம் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரராசன் திருமணி கடந்த (25.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசா மற்றும் சுந்தரம் (லண்டன்) தம்பதியரின் அன்பு மருமகளும், சுந்தரராசன் அவர்களின் அன்பு மனைவியும், ஜெஸ்ரர்ராஜன் (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், நிகாயினி (கனடா) அவர்களின் அன்பு மாமியாரும், அருவி, விஷாகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவனேஸ்வரி, யோகேஸ்வரி, சிவப்பிரகாசம் (கனடா), தியாகலிங்கம், மகேந்திரலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரி (கனடா), ரவீந்திரராசா (இந்தியா), இராஜலக்ஷ்மி (லண்டன்), சௌந்தரராஜா (லண்டன்), ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கதிரமலை வீதி,**
**சுன்னாகம் தெற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**சுந்தரராசன் (கணவர்) - 077 331 8350**
**ஜேஸ்ரர்ராஜன் (மகன்) - 077 547 1513**

(CS/55511) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
13 . 04 . 1943



மறைவு
30 . 06 . 2022

## கந்தையா இராஜதுரை
(இராசா இரும்பகம் - உரிமையாளர்)

ஆண்டுகள் இரண்டு கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த
எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

மூதூர் இருதயபுரம்

# மதுபானசாலைக்கெதிரான ஆர்ப்பாட்டம்: கைதுசெய்யப்பட்டவர்களுக்குப் பிணை!



திருகோணமலை, ஜூன் 30

மூதூர் - இருதயபுரம் பகுதியில் இடம்பெற்ற மதுபானசாலைக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட 15 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கானது எதிராளிகள் சார்பாக நகர்த்தல் விண்ணப்பத்தின் மூலம் நேற்றுமுன்தினம் மூதூர் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது கைதுசெய்யப்பட்ட அனைவரும் நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி எச்.எம்.தஸ்னீம் பௌசான் முன்னிலையில் திறந்த நீதிமன்றில் நூற்றுக்கும் அதிகமானவர்களுடன் ஆள் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். பின்னர் ஒவ்வொருவரும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில்விடுவிக்கப்பட்டிருந்ததோடு, எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதி வழக்கு விசாரணைக்காகத் தவணையிடப்பட்டுள்ளது.

இருதயபுரம் பகுதியில் திறக்கப்பட்ட மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 25ஆம் திகதி பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது சிலரால் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட கைகலப்பைக் காரணம்காட்டி, ஜனநாயக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலுக்கட்டாயமாகக் கைது செய்யப்பட்டிருந்தனர். இரவு வேளையில், வீடுகளுக்குள்ளும் நுழைந்து அத்துமீறிய வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கைது நாடெங்கும் பல்வேறு விமர்சனங்களை பொலிஸாருக்கு எதிராக ஏற்படுத்தியிருந்தது. (ம-50)

# மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 11 . 1948



மறைவு
26 . 06 . 2024

## செல்லத்துரை சந்திரானந்ததேவி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சந்திரானந்ததேவி கடந்த (26.06.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் வல்லிபுரம் (சண்முகம்) - முத்தம்மா தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பூதப்பிள்ளை செல்லத்துரை (ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வன் செல்லத்துரை மோகன பிரதீபன், மற்றும் செல்லத்துரை கார்தீபன் (யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவன் கிரிக்கட் அணி தலைவன் - இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கார்த்தீபன் நிரோஜா (சட்டத்தரணி இங்கிலாந்து) அவர்களின் பாசமிகு மாமியாரும், கார்த்தீபன் ஸ்ரீநிகா அவர்களின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற விவேகானந்தன் (அமெரிக்கா), விபுலானந்த அடிகளார் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆழ்வார் செல்லையா, ஆழ்வார் மாணிக்கம், கிட்ணபிள்ளை பொன்னம்மா, தம்பையா இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான ஆழ்வான் வல்லிபுரம், ஆழ்வான் வேலுப்பிள்ளை, அன்னம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும், மகாதேவா, மகாதேவி, பூதப்பிள்ளை தேவராஜா (பிரான்ஸ்), பூதப்பிள்ளை விஜயன் (ஜேர்மனி), புதப்பிள்ளை மன்மதன் (பிரான்ஸ்), பாஸ்கரன் ஜெயதேவி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வல்லிபுரம் விஜயசிங்கம், வல்லிபுரம் விமலகுலசிங்கம் (ஜேர்மனி), வல்லிபுரம் விஞ்ஞானகுலசிங்கம் (அவுஸ்திரேலியா) ஸ்ரனிஸ்லஸ் கமலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வத்சலா விவேகானந்தன் (அமெரிக்கா), மஞ்சுளா விபுலானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் சைவ மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மண்ணில்
01 . 11 . 1949



விண்ணில்
28 . 06 . 2024

## கந்தையா சிவபாதசுந்தரம்
(மின்சாரசபை முன்னாள் ஊழியர்)

இமையாணன் வடக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் மின்சாரசபை முன்னாள் ஊழியருமாகிய **கந்தையா சிவபாதசுந்தரம்** கடந்த வெள்ளிக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (துரை) சின்னமணி ஆகியோரின் செல்வ புதல்வனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், யசோதரன் (UK), கஜேந்திரன் (ஆசிரியர், யா/கரணவாய் மகா வித்தியாலயம்), சுபேந்திரன் (முன்னாள் ஊழியர் கொமர்ஷல் வங்கி) ஆகியோரது அன்புத் தந்தையும் சுபேந்திரன் பர்மினாவின் (கொமர்ஷல் வங்கி, திருநெல்வேலி) மாமனாரும் சூர்யதேவ் இன் பேரனும் யசோதையம்மா, காலஞ்சென்ற கந்தையா வேலுப்பிள்ளையின் (வைத்தியசாலை ஊழியர், ஊறணி) மருமகனும் நாகேஸ்வரன் (அவுஸ்ரேலியா), சிவகுமார் (அவுஸ்ரேலியா) ஆகியோரது அன்பு மைத்துனரும் மஞ்சுளா (அவுஸ்ரேலியா), சுதாமா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் கனகசபை, கணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் மங்கையற்கரசி (UK) சுந்தரம் (மலேசியா) நடராஜா (கனடா) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 470 1307

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியா உலகச்சம்பியன்!


ஆட்டநாயகன் - கோலி


தொடர் ஆட்டநாயகன் பும்ரா



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், தென்னாபிரிக்காவைத் தோற்கடித்து இந்தியா த்ரில் வெற்றிபெற்றது. இதன்மூலம் இந்தியாவின் 13 ஆண்டுகால உலகக்கிண்ணக் காத்திருப்பு நேற்று இரவுடன் நிறைவுக்கு வந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணியின் தலைவர் ரோகித், முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். ஆரம்ப வீரர்களான கோலி, ரோகித் இருவரும் அதிரடியுடன் ஆரம்பித்தாலும் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் ரோகித் சர்மா. ரிஷப் பன்ட் ஓட்டமெதையும் பெறாமலும், சூரியக்குமார் யாதவ் 3 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்பினார்கள்.

அக்சர் பட்டேல், விராட் கோலி இருவரும் ஆட்டத்தை தென்னாபிரிக்காவின் பிடியிலிருந்து மீட்டனர். 47 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் அக்சர் பட்டேல். அரைச்சதம் கடந்த கோலி, அதன் பின்னர் அதிரடியை இரட்டிப்பாக்கினார். 76 ஓட்டங்களுடன் கோலி ஆட்டமிழந்தார். டுபேயும் 27 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப இந்திய அணி 7 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.


பந்துவீச்சில் மகாராஜ், நோர்ஜி இருவரும் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஹென்றிக்ஸ் மற்றும் குயின்டன் டி ஹொக் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினார்கள். குயின்டன் ஒருமுனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் ஹென்றிக்ஸை போல்ட் முறையில் வெளியேற்றினார். பும்ரா, எய்டன் மார்க்ரமை வீழ்த்தினார். அர்ஷ்டீப் சிங் குயின்டன் மற்றும் ஸ்ரப்ஸ் இணைந்து ஆட்டத்தை மாற்றினார்கள். அதில் வெற்றியும் கண்டனர். இருவரும் இணைப்பாட்டமாக 58 ஓட்டங்களைப் பகிர்ந்த பின்னர் ஸ்ரப்ஸை வீழ்த்தினார் அக்சர் பட்டேல். குயின்டன் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 27 பந்துகளில் 52 ஓட்டங்களைக் குவித்து, இந்தியாவின் உலகக்கிண்ண கனவில் மண்போட்டார் கிளாசன். இறுதி 30 பந்துகளில் 30 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. பும்ரா, அர்ஷ்டீப் சிங் மற்றும் பாண்டியா மூவரும் மிகமிக நேர்த்தியாகப் பந்துவீசினார்கள். 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இந்திய அணி.

பாண்டியா 3 விக்கெட்டுகளையும், அர்ஷ்டீப் சிங் மற்றும் பும்ரா இருவரும் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

ஆட்டநாயகனாக விராட் கோலி தெரிவானார். தொடராட்ட நாயகனாக பும்ரா தெரிவானார். (ம)





06 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22.10.1954
மறைவு 30.06.2018

அமரர்
சாந்தலிங்கம் இராசகுமாரி

ஆண்டுகள் ஆறு கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்.
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மகள்-சி.சண்முகப்பிரியா(ஜசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு - கொக்கிளாய் பேருந்துச் சேவை சீரில்லை



முல்லைத்தீவு, ஜூன் 30

முல்லைத்தீவு- கொக்கிளாய் வழித்தடத்தில் பயணிக்கும் இ.போ.ச. பேருந்து சேவை சீரானமுறையில் இடம்பெறாமையால் பயணிகள் அவதிக்குள்ளாகின்றனர் என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

குறித்த போக்குவரத்துச் சேவைகள் சீரான முறையில் இடம்பெறாமையினால் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பேருந்து தரிப்பிடத்தில் நீண்டநேரம் காத்துக்கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பருவகாலச்சீட்டைப் பெற்று பயணத்தை செய்யும் பயணிகள் பேருந்துச் சேவையின்மையால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு சாலை அதிகாரிகள் தொடர்ச்சியாக அசமந்தப்போக்குடன் நடந்து கொள்கின்றனர். எனவே பாடசாலை மாணவர்கள் மற்றும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, குறித்த போக்குவரத்துச் சேவையை உரிய முறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ப-19)


## வாடகைக்குண்டு

கந்தப்பசேகரம் வீதியில் கடைகள், பிறவுண் வீதியில் சிறிய வீடு வாடகைக்குண்டு.

(CS/55542) N-1

077 772 2215

## காணி விற்பனைக்கு

யாழ். கட்டுவன் பகுதியில் அமைந்துள்ள ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**விலை பேசித்தீர்மானிக்கப்படும்.**

தொடர்புகளுக்கு: 077 117 4422

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்**

**A-9 வீதி முகப்புடன் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- ➤ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- ➤ இருபதடிப்பாதை (20).
- ➤ கைதடிச் சந்தி 100M தூரம்.
- ➤ சித்த வைத்தியசாலை முன்பாக.
- ➤ பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- ➤ காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ➤ ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

**Golden Real Estate (pvt) Ltd.**

077-029 4164
077-329 4130
077-294 1521

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி ஜனார்த்தனி கதிரன் அவர்களின் பாசமிகு தாயார்

**அமரர் இந்திராணி சிவதாஸ்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தோற்றம் 24.01.1953

மறைவு 26.06.2024

பிரிவின் துயரில்:
பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், வேலணை.

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 03 . 1958

மறைவு 28 . 06 . 2024

**ஆனந்தவடிவேல் புவனேஸ்வரி**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தவடிவேல் புவனேஸ்வரி நேற்று முன்தினம் (28.06.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா - கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசா ஆனந்தவடிவேல் அன்பு மனைவியும், சுகிர்தன், காலஞ்சென்ற சுயந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேந்தினியின் அன்பு மாமியாரும், இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, துரைராசா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி செம்பாட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலங்காவல் பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி.

(CS/55544) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**074 332 3888**

## மரண அறிவித்தல்



## சபாபதி சிவஞானம்

மல்லாகம் தேவாலய வீதியை பிறப்பிடமாகவும் 42/6 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சபாபதி சிவஞானம் நேற்று (29.06.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னம்மா - அருளம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பிலேமினா, திருநாவுக்கரசு மற்றும் நவமணியின் அன்புச் சகோதரனும் ஆவார். காலஞ்சென்றவர்களான ஞானமுத்து, செல்வராணி மற்றும் ராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், பிறேமலதா, ஜெயலதா, பத்மலதா, சிவகுமாரன், கலைச்செல்வி, தயாளினி, யசோதா, ருசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராசா, காலஞ்சென்ற யோகநாதன், புவனேந்திரன், ரதனி, விஜயபாஸ்கரன், ஜெயக்குமார், தயாபரன், சிமாளி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 748 8494**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாசத்திற்குரிய ஆசிரியரான

**திருமதி இந்திராணி சிவதாஸ்**

அவர்கள்

காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைவதுடன், அன்னாரின் இழப்பால் துயருற்றுள்ள அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மாணவன்**
**A.தயாபரன் குடும்பம்**
**உதயா ஜுவல்லரி**
**79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையைச்...

இது தொடர்பில் சஜித் மேலும் தெரிவித்ததாவது:-
சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம், 2028 ஆம் ஆண்டு முதல் நாம் மீண்டும் கடனைச் செலுத்த வேண்டும். 2033 ஆம் ஆண்டு முதல் செலுத்த முடியுமாக இருந்த கடனை 2028 ஆம் ஆண்டிலிருந்தே செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது அரசாங்கத்தின் இயலாமையையே காட்டுகின்றது. இவ்வாறான பலவீனமான இணக்கப்பாட்டையே எதிர்கொண்டுள்ளோம்.

வருங்காலக் கடன்களைச் செலுத்துவதற்கான அரசாங்கத்தின் பதில் வரிகளை அதிகரித்து பொதுமக்களின் பணத்தை பிக்பொக்கட் அடிப்பதாகவே உள்ளது. நாட்டின் பிரச்சினைகளை இவ்வாறு தீர்க்க முடியாது. நாட்டில் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்கவும், நாட்டின் பொருளாதார இயங்கிகளான நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறையினரை ஊக்கப்படுத்தவும், அவர்களின் தொழில்களை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் அரசாங்கம் தலையீடு செய்யவேண்டும். பொருளாதார வளர்ச்சியை உருவாக்கும் வகையில் அவர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய மூலதனம் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் பொருளாதார வளர்ச்சி நிலை ஏற்படும்.

இதன்மூலம் பொருளாதாரம் வளர்ச்சி கண்டு, பண வருமானம் கிடைத்து சுருங்கிப்போயுள்ள பொருளாதாரம் விரிவடையும். இந்த நேரத்தில் பொருளாதார விரிவாக்கத்தைத் தவிர வேறு தீர்வு நாட்டில் இல்லையென்றாலும், வரிக்கு மேல் வரியை மக்களின் தோள்களில் சுமத்தும் சூத்திரத்தை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

ஐக்கிய மக்கள் அரசாங்கத்தில் 10 இலட்சம் புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்க விசேட ஜனாதிபதி செயலணியை ஸ்தாபிப்போம். ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சிக்காக, சமூகத்தின் அனைத்து பங்குதாரர்களும் ஒன்றிணைக்கப்பட்டு, ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சியை நோக்கிப் பயணிப்போம். தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதியை விரைவுபடுத்தும் வகையில் தேசிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்போம். இவற்றின் மூலம் தான் மீண்டெழமுடியும் - என்றார்.

(அ-ம)

## பொதுக்...

ஜனாதிபதித் தேர்தலுக்கான பொதுவேட்பாளர் விடயம் தொடர்பான கலந்துரையாடல்களுக்காக, தமிழ் மக்கள் பொதுச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சந்திப்பு, வவுனியா விருந்தினர் விடுதியில், நேற்று மு.ப. 10 மணியிலிருந்து மாலை 4 மணி வரை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் பொதுச் சபையின் பிரதிநிதிகளும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள்.

சந்திப்பின் முடிவில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக, கட்சிகளும் மக்கள் அமைப்பும் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை எட்டப்பட்டது.

இந்த உடன்படிக்கை எதிர்வரும் ஆறாம் திகதி யாழ்ப்பாணத்தில் சம்பிரதாயபூர்வமாக கையெழுத்திடப்படும். இவ்வாறு மக்கள் அமைப்பும் கட்சிகளும் சம அளவு பிரதிநிதித்துவம் வகிக்கும் பொதுக் கட்டமைப்பை தமிழ்த் தேசியப் பேரவை என்று அழைப்பது என்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பேரவையானது ஜனாதிபதித் தேர்தலை நோக்கிப் பல உப கட்டமைப்புகளை உருவாக்கும். உப கட்டமைப்புகள் எல்லாவற்றிலும் கட்சிகளும் மக்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் சம அளவில் உள்வாங்கப்படுவார்கள். இந்தக் கட்டமைப்புகளில் ஒன்று யார் பொது வேட்பாளர் என்பதைத் தீர்மானிக்கும். மற்றொன்று, பொதுவேட்பாளருக்குரிய தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும். மற்றொன்று, நிதி நடவடிக்கைகளை முகாமை செய்யும். இவ்வாறு கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை முன்நிறுத்தும் வேலைகளை தமிழ்த் தேசியப் பேரவையானது முன்னெடுக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-18)

## மாங்குளம்...

உயிரிழந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கந்தசாமி கருணாகரன் (வயது-48) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்து திருத்த வேலை காரணமாக வீதியில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், அந்தப் பேருந்துடன் பாரஊர்தியொன்று மோதி விபத்துக்குள்ளாகியிருந்தது. கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், மேலும் இருவர் படுகாயங்களுடன் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவரே தற்போது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த கந்தசாமி கருணாகரன், தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கத்துக்கான செயலகத்தின் பணிப்பாளர் சபை பிரதிநிதியாகச் செயற்பட்டு வந்திருந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிரேம்குமார்மேற்கொண்டார். (அ-ம-125-26)

## நிரந்தரத்...

அமைப்புகளும் கூட்டாக அறிவித்துள்ளன.

இதுதொடர்பாக மேற்படி சிவில் அமைப்புகள் இணைந்து கூட்டாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

கல்முனை வடக்குப் பிரதேச சிவில் அமைப்புகளின் அழைப்பின் பேரில் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதிமுதல் அகிம்சை வழி அறவழியிலான எமது போராட்டம் வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றது. அதேநேரம் எமது அறவழிப் போராட்டம் சில சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட மாற்றங்களையும் கொண்டதாக அமைந்திருக்கிறது.

கல்முனைப் பிரதேசத்தில் தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றார்கள். நிர்வாக உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுகின்றது. அவர்களுடைய இருப்பு நாளுக்கு நாள் கேள்விக் குறியாக்கப் பட்டு வருகின்றது என்பதை எமது மக்கள் உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடு தான் இந்த எழுச்சிப் போராட்டம்.

இந்த எழுச்சியின் பின்னரான சந்திப்புகளில் துறைசார் உயர் அதிகாரிகள், அரசியல் தலைமைகள் உட்படப் பலரது எண்ணங்களில் எம் மக்களது நியாயமான போராட்டம் தொடர்பாகப் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, எமது பயணம் சரியான பாதையில் பயணிக்கின்றது என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

எனவே, இன்றும், இனிவரும் காலங்களிலும் தொடரப்போகும் நியாயமான, சட்டவலுவுள்ள எமது எதிர்காலச் சந்ததிக்கான நிரந்தர, சுயாதீன நிர்வாகச் செயற்பாடுகளை வென்றெடுக்கும் வெற்றிப் பயணத்தில் அனைவரும் தங்களது பங்களிப்பை வழங்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன் இந்தப் போராட்டத்தில் இணைந்து வலுச் சேர்த்த அனைத்துப் பொதுமக்கள், அனைத்துச் சமூகமட்ட அமைப்புகள், அரசியல் பிரமுகர்கள், நலன்விரும்பிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒன்றிணைந்து நிர்வாக உரிமையை மீட்போம் - என்றுள்ளது. (அ-ம-66)

## மடு...

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், மடு ஜோதிநகர் இரண்டாம் கட்டைப் பாலத்தின் அருகில் விபத்துக்குள்ளானதிலேயே மேற்படி இறப்புச் சம்பவித்துள்ளது. காயமடைந்தவர் முருகன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு முதற்கட்ட சிகிச்சையின் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(அ-ம-213-27)

## இரணைமடுவில்...

கிளிநொச்சி - இரணைமடுக் குளத்தில் நீராடச் சென்ற 14 வயதுச் சிறுவன் காணாமற்போன நிலையில் அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

காணாமற்போன சிறுவனும், சிறுவனின் சகோதரன் மற்றும் இரு நண்பர்களுமாக நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இரணைமடுக் குளத்தில் நீராடுவதற்காகச் சென்றுள்ளனர். குறித்த சிறுவர்களில் திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் தரம் - 9இல் கல்வி கற்றுவரும் முறிகண்டி வசந்தநகர் பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் நிசாந்தன் (வயது - 14) நீரில் மூழ்கிய நிலையில் காணாமற்போயுள்ளான்.

இதுதொடர்பில் சிறுவனின் குடும்பத்தினருக்கும், பொதுமக்களுக்கும் தகவல் வழங்கப்பட்ட நிலையில் இரணைமடு மீனவர்களும், பிரதேச மக்களும் இணைந்து காணாமற்போன குறித்த சிறுவனைத் தேடிவருகின்றனர்.

(அ-ம-66)

## வடக்கு...

கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதிகள் தவிர, மேலும் 22.23 மில்லியன் சதுர மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்படவுள்ளன என்றும் இராணுவ ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளுக்கான நிதியை வழங்கும் உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி கடந்த வியாழக்கிழமை கைச்சாத்திட்டுள்ளார். இதற்கமைய, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்காக ஜப்பான் அரசாங்கம் மேலும் 301 மில்லியன் ரூபா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## பாலகி...

முன்பள்ளிச் சிறுமி ஒருவர் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்து, முன்பள்ளி ஆசிரியருக்கு எதிராகப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள முன்பள்ளியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சட்டமருத்துவ அதிகாரியின் அறிக்கைக்காக சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-125-26)

## கடன்...

இரண்டு நாள்கள் விவாதம் நடத்தப்படவுள்ளது.

ஜூலை மாதம் 2 ஆம் மற்றும் 3ஆம் திகதிகளில் இந்த விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில்
விவாதிக்கப்படவுள்ளன. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுதொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - ஜூலை 2 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## ஜனாதிபதித்...

சுற்றுநிருபத்தின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - முன்னைய வருடங்களைப் போலவே தற்போது மூலப் பொருள்களின் விலைகள் உயர்வடைந்து காணப்படுகின்றமையால் முழுமையான செலவு தொடர்பாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதாக அரச அச்சுகர் கங்கா கல்பனி லியனகே குறிப்பிட்டுள்ளார். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கு ஆதரவளிக்குமாறு அழுத்தம் தருகிறது இந்தியா

## கூறுகிறது பெரமுனக் கட்சி

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவு வழங்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சிக்கு இந்தியா அழுத்தம் கொடுத்து வருகின்றது என்று ராஜபக்ச குடும்பத்தின் பேச்சாளராகக் கருதப்படும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தம்மால் இயக்கக்கூடிய நபரொருவர் ஜனாதிபதியாக இருக்கவேண்டும் என இந்தியா கருதுகின்றது. அதற்கமைய பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்க ஆதரவு வழங்குமாறு பஸில் ராஜபக்சவுக்கு அந்நாடு அழுத்தம் கொடுத்துவருகின்றது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவைப் பெறுவதற்கு இருந்த இறுதி வாய்ப்பையும் ரணில் விக்கிரம சிங்க தவறவிட்டுவிட்டார். முதுகெலும்பிருந்தால் முடிந்தால் ரணில் விக்கிரமசிங்க யானை சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிக் காட்டட்டும் - என்றார்.

(ச-25-44)


### தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு **பகல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.**

தொடர்பு: 074 056 7781

(CB/42739) J-1

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ். நாயன்மார்கட்டு சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 930 8363, 077 545 3785

(CS/55483) J-1

### கடை வாடகைக்கு

கல்வியங்காடு பிரதான வீதியில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 175 0746, 077 806 9790

### கட்டடம் வாடகைக்கு

யாழ். கஸ்தூரியார் வீதியில், முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் 25'X36' நீள அகலம் உடைய காட்சியறை/ வர்த்தகம்/ வியாபாரம் வேறு தேவைகளுக்கும் உகந்தது.

தொடர்பு:- 077 737 4726

### ஹோட்டல் உபகரணங்கள் விற்பனை




### ஆசிரியர் தேவை

**A/L 2025 English Medium** மாணவனுக்கு வீட்டிற்கு வந்து **Physics** கற்பிக்க ஆசிரியர் தேவை.

தொடர்பு: 074 085 3227

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

வைத்திய நிபுணர் ஒருவரின் தனிப்பட்ட பாவனையில் உள்ள VESPA VXL 125 விற்பனைக்குண்டு.

தரகர் தேவையில்லை.

(சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்)

தொடர்பு: 077 226 7053

### வேலையாள் தேவை

பருத்தித்துறை அல்வாய் வடமேற்கில் வீட்டு வேலை பார்ப்பதற்கும், 4 வயது குழந்தையை பராமரிப்பதற்கும் தங்கி நின்று வேலை பார்க்கக் கூடிய **வேலையாள் தேவை.**

(சம்பளம் - 35.000 பேசித் தீர்மானிக்கலாம்.)

077 078 4411, 075 078 4466

(CS/55528) J-1

### வீட்டு வேலைக்கு ஆள் தேவை (பெண்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு **வீட்டு வேலைக்கு ஆள் தேவை.**

- வயதெல்லை 25 - 40,
- வேலை நேரம் 8am - 4.30 pm ,
- சம்பளம் 45000

அருகில் உள்ளோர் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 077 789 8862

(CS/55532) J-1

### காணிகள் விற்பனைக்குண்டு

வெள்ளவத்தையில் 840,1100,1350Sqft Apt. 2.8p, 2pகடை, 6p,8.5p,12p காணி. வீடு. பம்பலப்பிட்டியில் 1080,1400SqftApt. 6p,9p,26p. தெஹிவளையில் 1050,1220Sqft Apt. 6p,8p,10pவீடுகள். கல்கிசையில் 1300Sqft Apt. 3p,4p,6p,20p,32p வீடுகள்.காணிகள். இரத்மலானையில் 6p,8pகாணி. வத்தளை. கொட்டாஞ்சேனை மற்றும் பருத்தித்துறை. யாழ்ப்பாணம். நல்லூரில் காணிகள்.வீடுகள். கடைகள் விற்பனைக்குண்டு.

076 306 0013

(Gr.42727)(N-1)

### விசா ஆலோசனை சேவை

சட்டரீதியான வழிமுறைகள் ஊடாக சரியான விசா ஆலோசனைகளை பெற்று உங்கள் வெளிநாட்டு கனவுகளை நனவாக்கிக் கொள்ளுங்கள்.

**எமது சேவைகள்**

நிராகரிக்கப்பட்ட விசாக்களை மீள பெற்றுத்தருகின்றோம். கனடா. பிரான்ஸ். இத்தாலி. போலாந்து. நியூஸ்லாந்து. அவுஸ்ரேலியா. லண்டன். ஜேர்மனி போன்ற சகல நாடுகளுக்குமான விசிட் விசா. செங்கன் விசா. வேலை விசாக்களுக்கான சேவை.

- வங்கி உத்தரவாதம்
- சகல விசா படிவங்கள் பூரணப்படுத்தல் இந்தியாவில் இருந்து ஹோட்டல்களுக்கான பணியாளர்களை வரவழைத்து கொடுத்தல். கனடா ஆவணங்களை சமர்ப்பித்து 48 மணிநேரத்தில Finger Print ஏற்பாடுக்கான துரித சேவை.

தொடர்பு:- 077 604 0373, +44 740 508 6762

(CS/28417) J-1

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம். முனிஸ்வரன் வீதியிலுள்ள குளி 3 (தற்போது அளப்பனவு செய்யப்பட்டபடி 12 அடி அகலமும் 60 அடி நீளமும் உடையது) விஸ்தீரணமுடைய வியாபார நிலையமாகப் பாவிக்கப்படக் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 076 695 7650

(CS/55526) J-1

### வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் கடை ஒன்றிற்கு **முழுநேர நிரந்தர விற்பனையாளர் தேவை.**

யாழ் நகரப்பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

மதிய உணவு மற்றும் மாலை தேநீர் வழங்கப்படும்.

**வயதெல்லை - 18 - 35**

**சம்பளம் - 1000 - 1500 / நாள்**

**Asslam Traders , Jumma Mosque Lane, Jaffna.**

077 614 5682

(CS/55484) J-1

### வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

- தச்சு வேலையாட்கள் (75000/- மேல்)
- தளபாட பெயின்ரர் (60000/- மேல்)
- வேலை பழக விரும்புபவர்கள் (25000/- மேல்)

நிரந்தரமான வேலையும், தங்குமிட வசதியும் உண்டு.

**ஆர்க் தளபாட நிலையம்**

தொடர்பு:- இல. 35, கொட்டைக்காடு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, (பஸ்டிப்போ அருகாமை)

021 221 9909, 077 300 1763

(CS/55540) J-1

### வேலையாட்கள் தேவை

**யாழ். நகரில் அமைந்துள்ள ஹரி ஹோட்டலுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.**

- Supplier
- Helper

**18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்.**

தொடர்பு:- 077 990 1340, 021 221 7819

328, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(CS/55545) J-1

### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்

சகல நாடுகளுக்குமான விசேட விலைக்கழிவு

(மற்றய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்)

திருமுருகன் பொதிகள் சேவை

321, K.K.S வீதி, யாழ்ப்பாணம்

0777 554 528

11 KG மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | - 1300/= |
| Canada | - 2400/= |
| Australia | - 2300/= |
| USA | - 2400/= |
| France | - 1990/= |
| Germany | - 1990/= |

### தென்னிந்திய தலயாத்திரை

35 பிரசித்தி பெற்ற ஆலயங்கள் — பயணம் JULY 21

**கட்டணத்தில் உள்ளடங்குபவை**

- e-Visa
- விமான பயணசீட்டு
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- மூன்று வேளை உயர்தர சைவ உணவு
- தண்ணீர் போத்தல், தேநீர், பழச்சாறு
- சிறப்பு நுழைவுக்கட்டணங்கள்
- 2 சுற்றுலா மேலாளர்கள்
- இரவு பயணம் இல்லை

12 நாட்கள்

Freedom Fly Travels — Explore MAX

18 வருட அனுபவ Travel Partner

தொடர்புகளுக்கு: +94 76 864 4011

Freedom Fly Travels, 388 Temple road, Nallur, Jaffna

(CS 845) V-1

UKI HUB — UKI

க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றிவிட்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில் இலக்கை நகர்த்த நினைக்கும் இளையோருக்கான ஓர் அரிய வாய்ப்பு!

**2024 புதிய பிரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

காலம் : 6 மாதம் (முழு நேரம் | மு.ப 9.00 - பி.ப 5.00)

இடம் : கிளிநொச்சி , வவுனியா

மொழிமூலம் : தமிழ்

- Full Stack Web Development (MERN Stack)
- Basic Business Skills
- Spoken English and Communication Skills
- Personal Coaching



யுகேயின் கிளிநொச்சி மற்றும் வவுனியா நிலையங்களில், 6 மாத கால Full Stack Web Development கற்கை நெறிக்கான அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன. இது முழுமையாக புலமைப்பரிசில் அடிப்படையில் வழங்கப்படும் கற்கை நெறியாகும்.

தொழில்நுட்பத்துறையில் உங்கள் இலக்கிற்கான முதற்படி எங்களுடன் !

SCAN & APPLY NOW

0770740174 · kilinochchi@uki.life · 423, Thirunagar, Kilinochchi, Srilanka

விண்ணப்ப முடிவுத்திகதி 07th July 2024

www.uki.life · apply@uki.life · No 57, 2nd cross street, Vavuniya, Srilanka




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30. 06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

பார்க்கத் தெரிந்தால் பாதை தெரியும்
பார்த்து நடந்தால் பயணம் தொடரும்
பயணம் தொடர்ந்தால் கதவு திறக்கும்
கதவு திறந்தால் காட்சி கிடைக்கும்
காட்சி கிடைத்தால் கவலை தீரும்
கவலை தீர்ந்தால் வாழலாம்

*– கண்ணதாசன்*

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஆனி 16 | ஞாயிற்றுக்கிழமை (30.06.2024) | சிகரம் :208



நிலாந்தன்

# தமிழ் மக்கள் அதைச் செய்வார்கள்

> ஒரு பொதுவேட்பாளரின் கீழ் அதாவது ஒரு பொதுநிலைப்பாட்டின் கீழ் தமிழ் மக்கள் ஒன்றுபடுவார்களாக இருந்தால், கட்சிகள் அந்த யதார்த்தத்துக்குக் கட்டுப்படும். கட்சிகள் அந்த மக்களின் விருப்பத்துக்குக் கட்டுப்படும். எனவே இப்பொழுது தமிழ்ப் பொதுஅமைப்புகள் ஒன்றிணைந்து உருவாக்க முயற்சிப்பது தமிழ் மக்கள் மத்தியில் ஐக்கியத்தைத்தான்.

சஜித் பிரேமதாஸ தமிழ்ப் பொதுவேட்பாளரை 'பொதுப்பேரழிவு' என்று கூறியிருக்கிறார். யாழ். ஆயர் இல்லத்தில் நடந்த சந்திப்பில் அவர் அவ்வாறு கூறியிருக்கி றார். அதேசமயம் தமிழ்க்கட்சி ஒன்றின் பிரமுகர், அது "கோமாளிக்கூத்து" என்று கூறுகிறார். ஒரு விமர்சகர் அது "திருவிழாக் கடை" என்று கூறியுள்ளார் திருவிழா முடிந்ததும் கடை கலைந்து விடும் என்ற பொருளில். மற்றொரு விமர்சகர் அது "ஆண்டிகள் கூடிக்கட்டிய மடம்" என்று கூறியிருக்கிறார்.

அண்மைய ஆண்டுகளில் தமிழ் அரசியலில் ஒரு நடவடிக்கை இவ்வாறு பல்வேறு தரப்புகளாலும் பல்வேறு பெயர் சூட்டி விமர்சிக்கப்படக் காரணம் என்ன ?

ஏனென்றால் முதலாவதாக, அது பெரிய அதிர்வை ஏற்படுத்தத் தொடங்கி விட்டது. இரண்டாவதாக அது பலருடைய நிகழ்ச்சிநிரலைக் குழப்புகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தம் எதிர்கால நம்பிக்கைகளையும் சொத்துகளையும் முதலீடு செய்யும் பலருக்கு அது உபத்திரவமாக இருக்கிறது. எதிர்காலத்தில் உள்நாட்டில் ஏற்படக்கூடிய கட்சிக் கூட்டுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப அது எதிர்க்கப்படுகிறது.

இவ்வாறு அதனை வெவ்வேறு பெயர்களால் அழைக்கும் ஒவ்வொருவரும் அதைக் கண்டு பயப்படுகிறார்களா? அல்லது அதைக்காட்டித் தமிழ் மக்களைப் பயமுறுத்துகிறார்களா?

தமிழ்மக்கள் அதைக்கண்டு பயப்படவில்லை. ஏனென்றால் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் குறித்த மக்கள் சந்திப்புகளின் போதெல்லாம் தமிழ் மக்கள் அதற்கு அமோகமாக ஆதரவு காட்டி வருகிறார்கள். தமிழர் தாயகத்தில் பரவலாக முன்னெடுக்கப்படும் சிறு சந்திப்புகள் எல்லாவற்றின் போதும் பொதுமக்கள் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடரில் ஒன்றில் ஆதரவாக காணப்படுகிறார்கள். அல்லது அதைப் பற்றி அறிவதற்கு ஆர்வமாகக் காணப்படுகிறார்கள். அந்த ஆர்வம்தான்;அந்த ஆதரவுதான் அதை எதிர்ப்பவர்களுக்குக் கிலேசத்தை ஏற்படுத்துகின்றது.

இத்தனைக்கும் தமிழ்ப் பொதுவேட்பாளரை முன்னிறுத்தும் தரப்புகள் அவர்கள் பயப்படும்படியாக என்ன செய்திருக்கின்றன? அவர்கள் மிகத் தெளிவாகக் கூறுகிறார்கள், தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டப் போகிறோம் என்று. ஒரு மக்கள் கூட்டத்தை ஐக்கியப்படுத்துவது, அதன்மூலம் அந்த மக்கள் கூட்டத்தைப் பலப்படுத்துவது ஏன் மற்றவர்களுக்குக் கோபத்தை, கிலேசத்தை, பதற்றத்தை ஏற்படுத்தவேண்டும்? அப்படியென்றால் தமிழ் மக்கள் ஒன்றாகக் கூடாது என்று அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுகிறார்களா? ஆம். அதுதான் உண்மை. 2009க்கு பின் இருந்து கட்சிகளுக்கிடையே உடைவுகளை ஏற்படுத்தியவர்கள்; 2009இல் காணப்பட்ட பெரிய கூட்டை உடைத்தவர்கள்;பிறகு சொந்தக் கட்சிக்குள்ளேயே உடைவுகளை ஏற்படுத்தியவர்கள்; அதன்பின் எது கிழக்கு? மட்டக்களப்பா? திருகோணமலையா என்ற விவாதம் ஏற்படக் காரணமாக இருந்தவர்கள்; கிழக்கையும் வடக்கையும் பிரிக்கவேண்டும் என்று அரசியல் செய்பவர்கள்; கிழக்கை வடக்குக்கு எதிராகவும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் திருப்பும் அதேசமயம், கிழக்கைத் தென்னிலங்கைக்கு விசுவாசமாக மாற்ற உழைப்பவர்கள்... போன்றவர்கள்தான் தமிழ்மக்கள் ஐக்கியப்படக்கூடாது என்று சிந்திக்கிறார்கள்.

தமிழ் மக்கள் ஐக்கியப்பட்டால் என்ன நடக்கும் ? அதிசயங்களும் அற்புதங்களும் நடக்கும். ஒரு பொதுத் தமிழ்வேட்பாளர் ஒப்பீட்டளவில் அதிக வாக்குகளைப் பெறுவாராக இருந்தால், அது உலகத்துக்கு ஒரு வலிமையான செய்தியைக் கொடுக்கும். தென்னிலங்கைக்கு வலிமையான ஒரு செய்தியை கொடுக்கும். இவற்றுக்கெல்லாம் அப்பால் தமிழ் மக்கள் பொதுச்சபையின் செயற்பாட்டாளர் ஒருவர் கூறுவதுபோல, அது தமிழ்க் கட்சிகளுக்கு ஒரு வலிமையான செய்தியை உணர்த்தும்.

மக்கள் ஐக்கியப்பட்டு விட்டார்கள் என்றால், கட்சிகள் அதைப் பின்பற்றவேண்டியிருக்கும். கடந்த 15 ஆண்டுகளாக கட்சிகளை ஐக்கியப்படுத்த முடியவில்லை. கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் ஒரு பகுதி வெற்றிகளை அல்லது தற்காலிக வெற்றிகளைத்தான் பெற்றிருக்கிறார்கள். அவ்வாறு கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டவர்களில் அநேகமானவர்கள் இப்பொழுது மக்கள் அமைப்பில் இருக்கிறார்கள். இதுவரை காலமும் ஐக்கியத்தை மேலிருந்து கீழ் நோக்கி கட்டியெழுப்ப முயற்சித்தவர்கள் அவர்கள். மாறாக இப்பொழுது ஐக்கியத்தை கீழிருந்து மேல் நோக்கிக் கட்டியெழுப்பலாமா என்று முயற்சிக்கின்றார்கள்.

ஒரு பொதுவேட்பாளரின் கீழ் அதாவது ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் தமிழ் மக்கள் ஒன்றுபடுவார்களாக இருந்தால், கட்சிகள் அந்த யதார்த்தத்துக்குக் கட்டுப்படும். கட்சிகள் அந்த மக்களின் விருப்பத்துக்கக் கட்டுப்படும். எனவே இப்பொழுது தமிழ்ப் பொது அமைப்புகள் ஒன்றிணைந்து உருவாக்க முயற்சிப்பது தமிழ் மக்கள் மத்தியில் ஐக்கியத்தைத்தான். அந்த ஐக்கியம் கீழிருந்து மேல்நோக்கிய ஐக்கியம். மக்கள் எவ்வழியோ அவ்வழியே கட்சிகளும்.

ஆனால் பொதுவேட்பாளரை எதிர்ப்பவர்கள் சுட்டிக் காட்டும் அல்லது பயமுறுத்தும் விடயம் என்னவென்றால், பொதுவேட்பாளர் குறைந்தது 50%க்கு மேலான வாக்குகளைப் பெறவில்லை என்றால், அந்தப் பொதுவேட்பாளர் முன்வைக்கப் போகும் கோரிக்கைகள் தோற்கடிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்படும். அது தமிழ்மக்கள் அந்தக் கோரிக்கைகளை ஆதரிக்கவில்லை என்று உலகத்துக்கும் தென்னிலங்கைக்கும் காட்டுவதாக அமைந்துவிடும் என்பது

05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(16ஆம் திகதிய தொடர்ச்சி)

# ஒரு வாக்குமூலம்

# மூன்று வழக்குகள்





○ கே.வி.தவராசா

## 23 காயத் தழும்புகள்

'சட்ட மருத்துவ அதிகாரியின் சட்ட அறிக்கையிலும் சாட்சியத்திலும் எதிரியின் உடலில் 23 காயத் தழும்புகளும் சிகரெட்டினால் ஆறு இடங்களில் சூடு வைக்கப்பட்ட காயங்களும் காணப்படுவதும் அந்தக் காயங்களின் தழும்புகள் பயங்கரவாதத் தடைப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்ட காலத்தினுள் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என்பதனை சட்ட மருத்துவ அதிகாரி குறுக்கு விசாரணையில் ஏற்றுக் கொண்டுள்ளார். ஆகவே இந்த நீதிமன்றம் சட்டரீதியற்ற, எதிரியினால் சுயமாக வழங்கப்படாத, ஏற்கனவே யாழ். மேல் நீதிமன்றத்தினால் சாட்சியமாக ஏற்க மறுத்து நிராகரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை இந்த நீதிமன்றம் நிராகரிக்க வேண்டும்' என்ற கோதாவில் எனது வாதம் முன் வைக்கப்பட்டது.

அரச சட்டத்தரணியினதும், எதிரி தரப்பில் எனது சமர்ப்பணத்தையும் அடுத்து கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க 'எதிரியினால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது பொலிஸ் அதிகாரிக்கு சுயமாக வழங்கப்பட்டதே' எனக் கட்டளை வழங்கினார். அரச தரப்பால் சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினை நீதிமன்றம் எதிரிக்கு எதிரான சான்றாக முன்மொழிந்தது.

### பிரதான விசாரணைகள்

அரச சட்டத்தரணி எதிரியாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆதித்தியன் கனகரட்ணம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கவும், குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத்தன்மையையும் நம்பகத்தன்மையையும் ஒப்புறுதிப்படுத்தவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ச, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரின் மெய்ப்பாதுகாவலர்களை அழைத்து சாட்சியங்களை நெறிப்படுத்தி அரச தரப்புச் சட்டத்தரணி வழக்கை நிறைவுசெய்து முடித்துக்கொண்டார்

இவ்வழக்கின் எதிரிதரப்பில் ஆஜரான எனது சமர்ப்பணத்தில் -

1. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றதாக பொலிஸ் விசாரணையில் உறுதிப்படுத்தப்படவேண்டும். ஆனால் இந்த வழக்கில் எந்த விசாரணை அதிகாரிகளும் சாட்சியம் அளிக்கவில்லையென்பதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதற்கான எந்தவிதமான சான்றுகளும் அரச தரப்பால் நீதிமன்றின் முன் வைக்கப்படவில்லை.
2. எதிரியினால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது சுயமாக வழங்கப்பட்டதென இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான சான்றாக நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளதெனினும், குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தில் பதியப்பட்டுள்ள அல்லது கூறப்பட்டுள்ள சம்பவங்களின் உண்மைத் தன்மையை உறுதி செய்வதற்காக எந்தவிதமான சுயாதீன சான்றுகளையோ அல்லது வேறு சான்றுகளையோ அரச தரப்பால் முன்வைக்கமுடியவில்லை.
3. இந்த வழக்கில் அரசியல் பிரமுகர்களை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டபோதிலும் எதிரிகள் ஒருவருக்கொருவர் அறிமுகமானவர்கள் என்றோ அல்லது இருவருக்கும் இடையே சதி செய்வதற்கு எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழிமூலமாகவோ உடன்பாடு இருந்ததென்றோ எந்தவிதமான சான்றுகளையும் அரச தரப்பு நிரூபிக்கவில்லை .

எனவே இவற்றைக் கவனத்தில் கொண்டு, நீதிமன்றம் மூன்றாம் எதிரியை விடுதலைசெய்யவேண்டும் என எனது வாதத்தை முன்வைத்தேன்.

### ஆதித்தியன் விடுதலை

அரச தரப்பினதும் எதிரிதரப்பினதும் வாதப்பிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபயக்கோன் தனது தீர்ப்பில் 'குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது சுயமாக வழங்கப்பட்டதென நீதிமன்றம் கட்டளை வழங்கியதையடுத்து, அந்தக் குற்றஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றில் அரசதரப்பு சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருந்த போதிலும் குற்றஒப்புதல் வாக்குமூலத்தில் பதியப்பட்டுள்ள குறிப்பிட்ட சம்பவங்களில் எதிரி தொடர்புபட்டுள்ளதுடன் அந்தச் சம்பவங்கள் நடை பெற்றன என்பதனை அரசதரப்பு வேறு சான்றுகளினால் ஒப்புறுதிப்படுத்தவில்லை.




எதிரிதரப்பு வாதத்தை கவனத்தில் கொண்டு பிரமுகர்களை கொலைசெய்ய எதிரிகள் சதித்திட்டம் தீட்டி கொலைமுயற்சிக்கு எத்தனித்தனர் என அரச தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளை அரச தரப்பு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கத் தவறியுள்ளமையால் எதிரி விடுதலை செய்யப்படுகிறார்' என்று தீர்ப்பு வழங்கினார்.

### மேல்நீதிமன்ற நீதிபதியின் அதிர்ச்சிக் கட்டளை

கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க இந்த வழக்கின் எதிரியான கனகரட்ணம் ஆதித்தியன் வழங்கியதாக கூறப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப்பட்ட வாக்குமூலமென கட்டளை வழங்கி அதனை அரசதரப்புச் சான்றாக ஏற்றுக் கொண்டமை எனக்கு எதிர்பார்க்காத அதிர்ச்சியையும் ஆச்சரியமானது [illegible] ஏற்படுத்தியது.

நீதிபதியின் கட்டளைக்கு எதிராக மீளாய்வு மனுத் தாக்கல் செய்யவில்லை. எனது சட்டத்துறை அனுபவத்தின் அடிப்படையில், நான்கு தசாப்தங்களை கடந்த நிலையில் நான் ஆஜராகிய வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்பொழுது வழக்கின் கட்டளை அல்லது தீர்ப்பு சட்டரீதியாக எப்படி அமையும் என்பதில் எனது கணிப்பு தவறுவதில்லை ஆனால் இந்த வழக்கில் எனது கணிப்புத் தவறவில்லை, மாறாக தவறவைக்கப்பட்டது. அதற்குச் சில காரணங்கள் உண்டெனினும் அவற்றை நான் குறிப்பிடவிரும்பவில்லை. குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் உண்மை விளம்பல் விசாரணையில் நீதிபதி பியசேன ரணசிங்க வழங்கிய கட்டளைக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு மனுவைத் தாக்கல் செய்யும்படி சில சட்டத் தரணிகள் எனக்கு ஆலோசனை வழங்கிய போதிலும், நான் காலத்தையும் நடைமுறைச் சாத்தியப்பாடுகளையும் கவனத்திற்கொண்டு கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க வழங்கிய கட்டளைக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு மனுவைத்தாக்கல் செய்யவில்லை. மேன் முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு மனுவைத்தாக்கல் செய்திருந்தால் மேல் நீதிமன்றில் நடைபெறும் வழக்கு விசாரணைக்கு தடையுத்தரவைப் பெற்றிருக்கலாம். மேன் முறையீட்டு நீதிமன்றில் இடைக்கால தடையுத்தரவைப் பெற்ற பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வுமனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விசாரணை முடிவடைய பல வருடங்களாகும். ஏற்கனவே 2009 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரை தடுப்புக்காவலில் இருக்கும் ஆதித்தன் மேன் முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை தடுப்புக் காவலில் தொடர்ந்து காலவரையறையின்றி தடுத்து வைக்கப்படும் சூழ்நிலையை தவிர்ப்பதற்காக மேன் முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு மனுவைத் தாக்கல் செய்யவில்லை.


குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் கைதியினால் சுயமாக வழங்கப்பட்டது என மேல் நீதிமன்றம் கட்டளையிட்டால் பெரும்பான்மையான வழக்குகள் அரச தரப்புக்குச் சாதகமாகவே இறுதித் தீர்ப்புகள் அமையும். எனினும் விதிவிலக்காகவே எதிரிக்கு சாதகமான தீர்ப்புகள் அமைவதுண்டு. ஆனால் இந்த வழக்கில் இறுதியாக ஆதித்தனை நிரபராதியென விடுதலை செய்யப்படுவார் என்ற அதீத நம்பிக்கை எனக்கிருந்தது. இந்த வழக்கில் எதிரிக்கு சாதகமான இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டமைக்கு குற்றஒப்புதல் வாக்குமூலத்தில் கட்டளை வழங்கிய விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க ஓய்வு பெற்றமையும் ஒரு காரணமே. சில பக்கங்களை இங்கே பதிவதை தவிர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஆதித்தனுக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகளில் இரண்டு வழக்குகளில் விடுதலையான போதிலும் மூன்றாவது வழக்கான பாகிஸ்தான் தூதுவர் கொலை முயற்சி வழக்கில் மகர தடுப்பு முகாமில் தடுப்புக்காவலில் தனிமையில் தடுத்து வைக்கப்பட்டு, அண்மையில் தான் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

குற்றஒப்புதல் வாக்குமூலம் சுயமாக எதிரியினால் வழங்கப்பட்ட வாக்குமூலம் என நீதிமன்றம் கட்டளை வழங்கியிருந்தும் கூட, நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மீளாய்வு மனுவைத் தாக்கல் செய்யாமல் பிரதான வழக்குக்குச் சென்றமையே ஆதித்தன் இந்த வழக்கிலிருந்து விரைவாக விடுதலையாவதற்கு முக்கியமான காரணமாக அமைந்தது.

(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமனிதர் மருத்துவர் ஜெயக்குலராஜா: தமிழ் மண்ணின் மகோன்னத சரித்திரம்

## மகனின் மனப்பதிவு

ஜெயக்குலராஜா டானியல் ஜேசன்

பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி மூன்றாம் ஆண்டு தோன்றி ஜூன் மாதம் 16ஆம் திகதி இரண்டாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டு எம்மை விட்டுப் பிரிந்த என் அருமைத் தந்தை மருத்துவக் கலாநிதி ஜெயக்குலராஜாவிற்கு பல முகங்கள் இருந்தன. குடும்பத்தில் மூத்தவராகப் பிறந்ததினால் சிறு வயதிலிருந்தே பல பொறுப்புகள் அவர் தலைமேல். பொறுப்புகள் எவ்வாறு சுமைகளாக மாறி ஒரு கட்டத்துக்கு மேல் வெறுப்புகளாக மாறினவென்பதையும் அவர் என்னுடன் பல தடவைகள் பகிர்ந்திருக்கிறார். எனினும் அந்தச்சுமைகளைப் பொறுப்போடு சுமந்தவர் என் தந்தை. சுமைகளுக்குத் தெரியுமா சுமந்தவனின் வலி? மகனாக ஒரு முகம். சகோதரனாக ஒன்று. மருத்துவராக ஒன்று. குடும்பத் தலைவனாக தந்தையாக இன்னொன்று. நண்பனாக, சமுதாயச் சீர்திருத்தவாதியாக, விடுதலைப் பங்களிப்பாளனாக, தன்னலமற்ற சேவையாளனாக, கல்லூரி முகாமையாளராக, பல அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவராக, இளையவர்களுக்கு வழிகாட்டியாக என்று அடுக்கிக் கொண்டே போகலாம் இவர் வாழ்க்கையின் பரிணாமங்களை!


ஒரு தந்தைக்கும் மகனுக்குமான உறவு இன்னொரு தந்தையையும் மகனையும் தவிர, வேறொருவராலும் அதி தெளிவாகப் புரிந்துகொள்ளப்படாத ஒன்று. கோபங்களுக்கு அப்பால் ஒரு வயதைக் கடக்கும் பொழுது ஆழமான, அர்த்தமுள்ள, பரஸ்பர மரியாதை நிறைந்த உறவாக அது உருவெடுக்கும் என்பதை என் அனுபவத்தில் நான் ஆணித்தரமாகக் கூறமுடியும். அதிக வார்த்தைகள் தேவைப்படாத ஒரு உறவு அது. அன்பு ஆர்ப்பாட்டமில்லாமல் பின்னிருக்கையில் அமர்ந்திருக்கும் உறவது. மகன் அவையத்தில் முந்தியிருக்கவேண்டும் என்ற ஏக்கம் கலந்த அவா தந்தையிடம், அதற்கான அனைத்து முயற்சிகளையும் நான் சரிவரச் செய்யவேண்டுமே என்ற உந்துதல். இவ்வுந்துதலால் சில பல வேளைகளில் எல்லை மீறும், மற்றவர்களுக்கு படு அநியாயமாகத் தெரியும் சீற்றம்! இந்தத் தராசின் மறுபுறத்திலோ தந்தையைப் பெருமைப்படுத்தவேண்டுமேதவிர அவர் பெயருக்கு இழுக்கு ஏற்படும்படி நடந்துவிடக்கூடாதே என்ற பயம் கலந்த, கனமான சுமைப் பொதி மகனிடம். இந்தப்பொதி வேதாளம் போல் வாழ்க்கைக்கும் முதுகினில்! எது செய்தாலும் அது போதவில்லைப் போலும் என்ற நிழல்போல் தொடரும் உணர்வு. இந்தத் தராசில் சரியான நிறுவைபெற இந்தப்பிரபஞ்சத்தின் படைப்பாளிகளாலேயே முடியாதெனும்போது நான் எம்மாத்திரம்? அதற்கும் அப்பால் எம்மவரோ இந்தத்தராசை 90களில் கள்ள நிறை போடும் கூப்பன் கடைக்காரன் போல் தான் பயன்படுத்துவர்.

சில ஆணித்தரமான, நியாயமான கோரிக்கைகளை இந்தச்சமுதாயத்தை நோக்கி நகர்த்தியவர் என் தந்தை. இது தொடர்பான செயற்பாடுகளால் பல இடர்பாடுகளை அவர் சந்திக்க நேர்ந்தது. சமத்துவம் அவர் கற்ற மருத்துவத்திலேயே 70களில் சூட்சுமமாக அழிக்கப்பட்டுக்கொண்டிருந்ததைக் கண்ட வேளையில் அரசாங்கத்துக்கெதிரான போர்க்கொடியை முதலில் தூக்கியவர் அப்பா. மருத்துவச் சிகிச்சை என வரும்பொழுது படைச் சிப்பாய், விடுதலைப் போராளி என்ற பாகுபாடுகள் மறைந்து மனிதம் தான் மேலோங்கி நிற்கவேண்டும் என்பதைச் செயல் மூலம் காட்டிய மாவீரன்! விடுதலைப் போராட்டம் நியாயமான ஒரு செயலாக இருந்த காலகட்டத்திலேயும், பின்னர் சரியான விதிமுறைகளுக்கமைய நடத்திச் செல்லப்பட்ட அனைத்துத் தருணங்களிலும் துணை நின்றவர் என் தந்தை. இதை அவர் போராளிகளுக்குச் சிகிச்சை அளித்தமைக்காகக் கைதுசெய்ய வந்த இராணுவ அதிகாரியான மறைந்த சரத் முனசிங்கவிடமே நெஞ்சை நிமிர்த்திக் கூறியவர்! விடுதலை வீரர்கள் எவ்வளவுக்கெவ்வளவு என் தந்தைமேல் மரியாதை வைத்திருந்தார்களோ அவ்வளவுக்கவ்வளவு சரத் முனசிங்க போன்ற இராணுவ அதிகாரிகளாலும் மதிக்கப்பட்டவர் ஐயா. என் தந்தை என்றுமே நாட்டைப் பிரிக்க விரும்பியதில்லை. இது பலருக்கும் ஆச்சரியமளிக்கலாம் ஆனால் அது தான் உண்மை! தமிழருக்கான சமத்துவ நிர்வாக உரிமையை அரசியல் சாசனத்துக்கமைய நாம் பெற்றுக்கொள்ளவேண்டும், இளைய சமுதாயத்தை அரசியல் தலைமைத்துவத்துக்குத் தயார்படுத்தவேண்டும், ஆயுதப் போராட்டத்தை எம் குரலுக்குச் செவிமடுக்கச் செய்வதற்கு நாம் பயன்படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறோமே தவிர அது நிரந்தத் தீர்வுக்கான வழி அல்ல என்பதை அன்றே தேசியத் தலைவருக்கு அச்சமின்றி எடுத்துரைத்தவர். இந்நேர்மையாலும், சலனமின்றி அவர் கண்களைப் பார்த்து வீரத்தோடு இவ்வார்த்தைகளை உதிர்த்ததாலும் உண்மையான அன்போடும் மிகுந்த பாசத்தோடும் தலைவரால் அண்ணா என்றழைக்கப்பட்ட இரண்டாமவர்! முதலாமாவர் அன்ரன் பாலசிங்கம்.

இன்று பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் என் தந்தையைப் பற்றிப் பல பேர் எழுத்தாக்கங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் சில பேர் தங்கள் புகமுக்காக எழுதியவர்கள். அப்பாவை நன்கறிந்திருந்தாலும் அவர் இறக்கும்வரை அவரைப் பற்றி விசாரிக்காத "நண்பர்கள்" சிலர் தாங்கள் எழுதப்போவதாகக் கூறித் தொலைபேசியழைப்பை ஏற்படுத்தியதையும் நானறிவேன். பலர் நல்ல நோக்கத்தோடு எழுதியிருந்தாலும் சில முக்கியமான உண்மைகளைத் தவிர்த்திருந்தார்கள். அறியாமையா? அரசியலா? பிரபஞ்சத்துக்கே வெளிச்சம்!

1983ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இறந்திருக்க வேண்டியவர் அப்பா. அங்கும் அவரது வீரம்தான் கதிரைக் கால்களை முறித்து அரக்கர்களுக்கெதிராகப் போராடக் கைகொடுத்தது! அன்று பிழைத்துப் பின்னர் 41 வருடங்கள் முழுமையாகவும், மகிழ்ச்சிகரமாகவும், தன்னலமில்லாச் சமூகத் தொண்டனாகவும், அன்புக் கணவனாகவும், அருமைத் தந்தையாகவும், ஒரு குழப்படி அப்பப்பாவாகவும் வாழ்ந்து இன்று நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.





ஒரு மகனாக இதைத் தெளிவுபடுத்தவேண்டியது என் தலையாய கடமை. அப்பாவும் நானும் பல தருணங்களில் அரசியல் பேசியிருக்கிறோம். இலங்கை அரசியல் வரலாற்றிலிருந்து போராட்ட வரலாறு வரை நாமிருவரும் அலசி ஆராய்ந்திருக்கிறோம். முதலாம், இரண்டாம் உலக யுத்தங்கள், ரஷ்யப் புரட்சி, சே குவேராவும் கியூபாவும் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்! அவருடைய அனைத்து அனுபவங்களையும் அவர் அருகிலிருந்து புத்திரனாகச் செவிமடுக்கும் பெரும் பாக்கியம் எனக்கு மட்டுமே கிடைத்த வரம்! '83இல் என் உயிர் காத்தவன் தம்பி பிரபாகரன், அதனால் நான் வாழ்கைக்கும் கடமைப்பட்டவனானேன்' என்று அடிக்கடி கூறுவார். சுய நிர்ணய உரிமைகளுடனான தமிழரின் நல்வாழ்வுக்காக அயராது உழைத்தவர் என் தந்தை. எள்ளளவும் அச்சமின்றி வாழ்ந்த மாமனிதராவார்.

அவருடைய வாழ்க்கையின் 29 வருடங்களை இடம்பெயர்வுக்குப் பின்னான முல்லைத்தீவு மாவட்டத்தில் கழித்தவராவார். பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர் அப்பா. மருத்துவத் தேவைகளுக்கான வளங்கள் மற்றும் ஆளணி இல்லாத கடினமான காலப்பகுதிகளிலே தன்னுடைய ஆளுமையாலும் உயரிய தலைமைத்துவ ஆற்றலாலும் சத்தமின்றிச் சாதித்தவர்! தன் மனதில் தவறு எனப்பட்டதைப் பிரபாகரனானாலும் ரணில் விக்கிரமசிங்கவானாலும் தைரியமாக எடுத்துரைத்தவர். என் தந்தை கொழும்பு மருத்துவக் கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருந்த அதே காலகட்டத்தில்தான் ரணிலும் அங்கே சட்டம் கற்றுக்கொண்டிருந்தார். இருவரும் வருடாந்த சட்ட, மருத்துவத் துடுப்பாட்டப் போட்டித் திடலில் சந்தித்துப் பின்னர் நெருங்கிய நண்பர்களாயினர். அந்நட்பு என் தந்தையின் இறப்புவரை தொடர்ந்தது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிவகுக்குமுகமாக மேற்கொள்ளப்பட்ட, வெளிச்சத்துக்கு வராத பல கலந்துரையாடல்களில் தமிழர் சார்பாக என் தந்தை பங்கேற்றிருக்கிறார். இருதரப்புப் புரிந்துணர்வுக்கு, இரு தரப்புகளாலும் மிகவும் மதிக்கப்பட்ட என் தந்தை ஒரு நம்பிக்கைப் பாலமாக தன்னை அர்ப்பணித்துக்கொண்டது மிகச்சிலருக்கு மட்டுமே தெரியும். அப்பா பரந்துபட்ட விடயங்களில் கவனம் செலுத்தி பல துறைகளில் சாதனைகளை ஏற்படுத்துவதற்கு மூல காரணியாக இருந்தவர் என் தாயார் திருமதி கிறிஸ்டினா ஞானதிலகராணி ஜெயக்குலராஜா எனக் கூறினால் அது மிகையாகாது. 51 வருடங்கள் என் தந்தையோடு நெடும்பயணம் செய்தவர். சொந்த மச்சாள். அப்பாவினுடைய அனைத்துக் குறைகளையும் பொறுமையாகச் சகித்தபடி எந்தசந்தர்ப்பத்திலும் முகம் கோணாமல் அவருக்கு உறுதுணையாக நின்றவர். தெய்வத்தை வணங்குபவர்கள் தெய்வத்தை சுமந்து வருபவர்களை என்றுமே வணங்கியதில்லை அல்லவா?


1983ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இறந்திருக்க வேண்டியவர் அப்பா. அங்கும் அவரது வீரம்தான் கதிரைக் கால்களை முறித்து அரக்கர்களுக்கெதிராகப் போராடக் கைகொடுத்தது! அன்று பிழைத்துப் பின்னர் 41 வருடங்கள் முழுமையாகவும், மகிழ்ச்சிகரமாகவும், தன்னலமில்லாச் சமூகத் தொண்டனாகவும், அன்புக் கணவனாகவும், அருமைத் தந்தையாகவும், ஒரு குழப்படி அப்பப்பாவாகவும் வாழ்ந்து இன்று நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவர் அன்றே மாமனிதர் தான். என்னிலும் அவர் பேரனிலும் எம் நெஞ்சிலும் தொடர்ந்து வாழ்வார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் கைவண்ணம்


சி.சிவநயா,
தரம் - 2
யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி.





த.லேயா,
தரம் - 03
பிளாட்டிக் பாடசாலை

தே.நாகவருண்,
தரம் - 5A
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை





மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

தீ.நயனிகா,
தரம் - 3C
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.



கு.கனிஷ்கா,
தரம் - 2D
யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தி.






லியோ டால்ஸ்டாய்

மகிழ்ச்சி என்பது வெளிப்புற விடயங்களை பொறுத்தல்ல. எந்த வழியில் அதனை அணுகுகிறோம் என்பதை பொறுத்ததே

## வழிகாட்டுவோம்



# தடைகளை கண்டு துவளதீர்கள்




வாழ்க்கை என்னும் பாதையில் பெரிய குழியில் தடுக்கி விழுந்தாலும் 'இத்தோடு நம் கதை முடிந்தது' என்று கருதாமல், குழியில் இருந்து மேலே வருவது எப்படி என்று எண்ண வேண்டும். இடையூறுகள், துன்பதுயரங்கள் போன்றவை எல்லா மனித வாழ்விலும் வருவது இயல்பானதுதான். ஆனால், சிலர் அதிலேயே துவண்டு வாடிவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தோல்வியை தழுவது தவிர்க்கமுடியாதது.

ஆனால், வெற்றியாளர்கள் எத்தகைய இக்கட்டான சூழலையும் கடந்து போய்விடுகிறார்கள். எதையாவது சாதிக்கும் முயற்சியில் இறங்கினால், தடைகள் குறுக்கிடத்தான் செய்யும். அந்தத் தடைகள் நம் பயணத்தை நிறுத்திவிடக்கூடாது. எந்தவொரு வெற்றியும் எடுத்த எடுப்பிலேயே கிடைத்துவிடுவதில்லை. அடுத்த அடியை எப்படி, எவ்வளவு அழுத்தத்தோடு எடுத்து வைக்கவேண்டும் என்பதை தீர்மானிக்க அத்தகைய தடைகள் கூட நமக்குத் தேவைத்தான். மனவுறுதியுடன் சிகரத்தினை நோக்கி சலிப்பின்றி பயணம் செய்யுங்கள். தடைகளுக்கு அஞ்சாதீர்கள். அவற்றை வரவேற்று கொண்டாடுங்கள். ஏனெனில், தடைகள் தான் உங்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும். நெருக்கடியான காலகட்டம் தான் மிகச் சிறந்த மனிதனை அடையாளம் காட்டுகின்றன...!!

# புறாக்கள்

- புறாக்களில் மொத்தம் 344 வகைகள் உள்ளன.
- புறாக்களை வீட்டில் வளர்க்கும் வழக்கம் சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியுள்ளது.
- பண்டைய காலத்தில் கடிதப் போக்குவரத்துக்கு புறாக்கள் அதிகமாக பயன்படுத்தப்பட்டன.
- முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்களில் கடிதப் போக்குவரத்தில் சிறந்த சேவை யாற்றியதற்காக புறாக்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- புறாக்களால் அதிகபட்சமாக மணிக்கு 92 மைல் வேகம்வரை பறக்கமுடியும்.
- புறாக்களை தனியாகக் காண்பது அரிது. அவை பெரும்பாலும் கூட்டமாகத்தான் திரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்.பிரகாஷ்

# வீழ்கின்றார் ட்ரூடோ!

உலக அரசியல் தலைவர்களில் ஈழத்தமிழர்களின் மனங்களில் தனியான இடத்தைப் பிடித்தவர் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ. ஈழத் தமிழர்களுக்கு எதிராக உலகின் பல நாடுகளும் குரல் கொடுக்கின்ற போதிலும், இலங்கையில் இடம்பெற்றது இனப்படு கொலைதான், போர்க்குற்றம்தான் என்பதை முதன்முதல் துணிந்து அறிவித்தவர் ட்ரூடோவே. வெறும் வாய்வார்த்தையுடன் நின்றுவிடாமல், 'இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே' என்பதை கனேடிய நாடாளுமன்றத்தில் தீர்மானமாகவும் அவர் நிறைவேற்றியிருக்கின்றார். இறுதிப்போரை முன்னெடுத்த போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு அவர் தடைகளையும் விதித்திருக்கின்றார். ஆனால், கனேடிய அரசியலின் அண்மைக்காலப் போக்கு ட்ரூடோவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாகவே சென்றுகொண்டிருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

32 ஆண்டுகளாக சென். போல்ஸ் தொகுதியை இழக்காமல் இருந்த ட்ரூடோ தரப்புக்கு இந்தத் தேர்தல் முடிவு துர்க்கனவே. அதிலும், சென். போல்ஸ் இடைத்தேர்தல் முடிவுகள் கனேடியர்களின் தற்போதைய மனநிலையை வெளிப்படுத்தும் என்று தேர்தலுக்கு முன்னதாக ட்ரூடோவே தெரிவித்திருந்த நிலையில், அவருக்குக் கிட்டிய தோல்வி 'ஓர் ஒப்புதல் வாக்குமூலமாகவே' பார்க்கப்படுகின்றது.

### எங்கும் அதிருப்தி

கனடாவில் தற்போது மதிப்பிழக்கும் அரசியல்வாதியாக ட்ரூடோ மாறிக் கொண்டிருக்கின்றார் என்பதை அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட ஐந்துக்கும் மேற்பட்ட கருத்துக் கணிப்புகள் வெளிப்படுத்தியுள்ளன. இஸ்ரேல் - ஹமாஸ் போரில் மேற்கொள்ளும் நகர்வுகள், ரஷ்யாவைப் பகைப்பது, பணவீக்கம், கனடாவுக்குள் அதிகரித்துவரும் ஆயுதக் கலாசாரம் என எந்தப் பக்கம் பார்த்தாலும் ட்ரூடோவை நோக்கித் தான் கனேடியர்களின் விரல்கள் நீள்கின்றன. குறிப்பாக பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரொறன்ரோவின் சென். போல்ஸ் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ட்ரூடோவின் லிபரல் கட்சி எதிர்க்கட்சியான கென்சர்வேடிவ் கட்சியிடம் மண் கௌவியிருக்கின்றது. 32 ஆண்டுகளாக சென். போல்ஸ் தொகுதியை இழக்காமல் இருந்த ட்ரூடோ தரப்புக்கு இந்தத் தேர்தல் முடிவு துர்க்கனவே. அதிலும், சென். போல்ஸ் இடைத்தேர்தல் முடிவுகள் கனேடியர்களின் தற்போதைய மனநிலையை வெளிப்படுத்தும் என்று தேர்தலுக்கு முன்னதாக ட்ரூடோவே தெரிவித்திருந்த நிலையில், அவருக்குக் கிட்டிய தோல்வி 'ஓர் ஒப்புதல் வாக்குமூலமாகவே' பார்க்கப்படுகின்றது.

### பொலிவியரின் எழுச்சி

பிரதமர் ட்ரூடோ எங்கெல்லாம் வீழ்ச்சியடைந்தாரோ, எங்கெல்லாம் தன் ஆதரவை இழந்துகொண்டிருக்கின்றாரோ அங்கெல்லாம் தன் தீர்மானங்கள் மற்றும் திட்டங்கள் மூலம் மக்களைக் கவர்ந்துள்ளார் கனேடிய எதிர்க்கட்சித் தலைவரும் கென்சர்வேடிவ் கட்சியின் தலைவருமான பியர் பொலிவர். ஆனால், பொலிவரின் எழுச்சியால் ஈழத் தமிழர்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை. ஏனெனில், ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் ட்ரூடோ கொண்டுள்ள அதே சிந்தனையைத்தான் பொலிவரும் கொண்டிருக்கின்றார். 'ஈழத்தமிழர்களின் பிரதிநிதியாக, அவர்களுக்கு இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கு நீதிகேட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை எனது ஆட்சிக்காலத்தில் கனடா நாடும்' என்ற அறிவிப்பு பொலிவருடையது. இருப்பினும், ஈழத்தமிழர்களுக்கு வேண்டப்பட்ட, ஈழத்தமிழர்களால் அவதானிக்கப்படவேண்டிய அரசியல் நகர்வுகள் தற்போது கனடாவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

எவர் ஆட்சியமைத்தாலும் எமக்கான குரல்கள் ஒருபோதும் வலுவிழந்துவிடக்கூடாது என்பதுதான் ஈழத்தமிழர்களின் தற்போதைய எதிர்பார்ப்பு.

# தமிழ் மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மை. பொதுவேட்பாளருக்குத் தமிழ்மக்கள் போதிய ஆதரவைக் கொடுக்கவில்லை என்றால், தேர்தல் அடிப்படையில் சிந்தித்தால், அது தோல்விதான்.

ஆனால் அந்தத் தோல்வி மனப்பான்மை எங்கிருந்து வருகிறது? கட்சிகள் தங்களுக்கு இடையே ஒன்றுபட்டால்; ஒன்றாக உழைத்தால்; கட்சிக்காக உழைக்காமல்; தனிப்பட்ட நபர்களுக்காக உழைக்காமல்; ஒரு பொது இலக்குக்காக உழைத்தால் மக்கள் வருவார்கள்தானே? வாக்களிப்பார்கள் தானே? கடந்த பல தசாப்தகால தமிழ் அரசியலில் அது நிரூபிக்கப்பட்டுள்ளது தானே? மக்கள் வாக்களிப்பார்களா இல்லையா என்ற சந்தேகம் எல்லாத் தேர்தல்களிலும் இருந்தது. எல்லா வேட்பாளர்களுக்கும் இருந்தது. அப்பொழுது மட்டும் தோற்றால் குடி முழுகிப் போகும் என்று யாரும் போட்டியிடாமல் இருக்கவில்லையே?

ஏனென்றால் அவர்கள் வெற்றிபெற்றபோதெல்லாம் அதைத் தங்களுடைய வெற்றியாகத்தான் கருதினார்கள்; தேசத்தின் வெற்றியாகக் கருதவில்லை. அல்லது மக்களின் வெற்றியாகக் கருதவில்லை. அனால் பொதுவேட்பாளரின் தோல்வி தேசத்தின் தோல்வியாக அமையலாம் என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கின்றது. ஆயின் தேசத்தை வெல்ல வைப்பது யாருடைய வேலை? கட்சிகளின் வேலையில்லையா? தேசத்தை வெல்ல வைப்பதைத் தவிர வேறு வேலை அவர்களுக்கு உண்டா?

கட்சிகளாகச் சிந்தித்தால், தனிப்பட்ட செல்வாக்கு மண்டலங்களுக்கூடாகச் சிந்தித்தால், தேர்தல் வெற்றி தோல்விகளுக்கூடாகச் சிந்தித்தால், தமிழ்ப் பொதுவேட்பாளர் வெல்லவேண்டும் என்ற திடசங்கற்பம் ஏற்படாது. கட்சிகளைக் கடந்து ஒரு பொது நிலைப்பாட்டுக்கூடாகச் சிந்தித்தால், அந்தப் பொது நிலைப்பாடு உருவாக்கப் போகும் கூட்டு உளவியலுக்கூடாகச் சிந்தித்தால். தமிழ்ப் பொதுவேட்பாளர் தோற்கக் கூடாது என்ற வைராக்கியம் பிறக்கும்.

எனவே தோல்வி மனப்பான்மையும் வெற்றியைக் குறித்த சந்தேகங்களும் எங்கிருந்து வருகின்றன என்றால் நாங்கள் உதிரிகளாக இருக்கும்பொழுது தான். கட்சிகள் உதிரிகளாக நிற்கும் பொழுது தான். கட்சிகள் ஒன்று மற்றதை சந்தேகத்தோடு பார்க்கும் பொழுதுதான். விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் கட்சிக்குள்ளேயே ஒருவர் மற்றவரை சந்தேகத்தோடு பார்க்கும்போதுதான். கட்சிக்குள்ளேயே விசுவாசக் குழுக்களை உருவாக்கும் போது தான்.

தேர்தல் தோல்விகள் கட்சிகளுக்குத்தான். மக்களுக்கு இல்லை. ஏனென்றால் மக்கள் என்றைக்குமே தோற்றதில்லை. பண்பாட்டுச் செழிப்புமிக்க நடுத்தர வர்க்கத்தை கொண்ட மக்கள் கூட்டத்தை யாராலும் தோற்கடிக்க முடியாது. தமிழ் மக்கள் பண்பாட்டுச் செழிப்புமிக்க நடுத்தர வர்க்கத்தைக் கொண்டவர்கள். அவர்களைத் தோற்கடிக்க முடியாது.

இன்று சிதறிக்காணப்படுவதால் அவர்கள் தோல்வி மனப்பான்மையோடு காணப்படுகிறார்கள். அவர்களை ஒன்றாகக் கூட்டிக் கட்டினால் மீண்டும் அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். தாங்கள் தோல்விகரமான விதங்களில் சிதறிப் போயுள்ளோம் என்பதை தமிழ் மக்களுக்கு உணர்த்துவதில்தான் ஒரு பொதுவேட்பாளரின் வெற்றி தங்கியிருக்கின்றது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒப்பீட்டளவில் அதிக வாக்குகளைத் திரட்ட முடிந்தால் அது சஜித் பிரேமதாஸ கூறுவது போல ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கும் சிங்கள - பௌத்த அரசு சிந்தனைக்கும் பேரழிவாகத்தான் தெரியும். ஒற்றையாட்சிக்குள் நின்று கொண்டு '13பிளஸ்' என்று கூறிக்கொண்டிருக்கும் தென்னிலங்கை வேட்பாளர்கள் அநேகர் அதனைப் பேரழிவாகத்தான் பார்ப்பார்கள்.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற தெரிவு பேரழிவா ? அல்லது கோமாளிக்கூத்தா ? அல்லது அது வெறும் வெங்காய வெடியா? என்பதனைத் தீர்மானிக்கப் போவது தமிழ் மக்கள்தான். இம்முறை தமிழ்மக்கள் தங்களுக்குத் தாங்களே வாக்களிக்கப் போகிறார்கள். தங்களுடைய தேசத் திரட்சியை நிரூபிப்பதற்காக வாக்களிக்கப் போகிறார்கள். அதாவது தமிழ் ஐக்கியம் எனப்படுவது கோமாளிக்கூத்து அல்ல. அது சிங்கள பௌத்த பெருந்தேசியவாத சிந்தனைக்கு பேரதிர்ச்சியாக; பேரழிவாக அமையமுடியும் என்பதை நிரூபிக்கவேண்டியது தமிழ் மக்கள்தான்.

வியட்னாமின் தேச பிதா என்று அழைக்கப்படும் கோசிமின் பின்வருமாறு கூறுவார் "மக்களிடம் செல்லுங்கள். மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள். மக்கள் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தருவார்கள்" என்று. கோசிமினுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த சீனாவின் தத்துவஞானியாகிய லாவோட்சு (Lao Tzu) பின்வருமாறு கூறுவார்...."மக்களிடம் செல்லுங்கள். மக்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். மக்களோடு வாழுங்கள். மக்களுக்கு என்ன தெரியுமோ அதிலிருந்து தொடங்குங்கள். மக்களிடம் என்ன இருக்கின்றதோ அதிலிருந்து கட்டியெழுப்புங்கள். காரியம் முடியும் பொழுது; இறுதி இலக்கு எட்டப்படும் பொழுது : தலைவர்களுட் சிறந்தவர்களான மக்கள் சொல்வார்கள் நாங்களே அதைச் செய்தோம் என்று"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இ-இ வரி

சஞ்சீவி சிறுகதை

மானிப்பாய் சுதன்

அதிகாலை வேளை. வீதி எங்கும் மக்கள் நடை பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். வரும் ஆண்டு தை முதல் போடப்பட்ட சட்டம் அனைவரையும் வீதிக்கு இறக்கியிருப்பது தெளிவாகத் தெரிந்தது. இருந்தும் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களுக்கான முனைப்புகள் இருக்கத்தான் செய்தன. ஆனாலும் அரசு நாட்டின் பெரும்பான்மையினருக்கு எதிராக இவ்வளவு தூரம் செயற்படும் என எவரும் கனவில் கூட நினைத்திருக்க வில்லை.

விளையாட்டுக் கழகங்கள் புத்துணர்வு பெறத் தொடங்கியிருந்தன. எழுக விளையாட்டுக் கழகம், மலரும் விளையாட்டுக் கழகம் எனக் கழகங்கள் போட்டியில் குதித்தன. பல பற்றைவளவுகள் மைதானமாகிக் கொண்டிருந்தன.

"என்ன மாப்பிள்ளை முகத்தில சந்தோசம் கூத்தாடுது. கலியாணம் சரி வந்திடுத்தோ...?" நீண்டகாலத்துக்குப் பின்னர் மைதானத்துக்கு வந்த சரவணனை பார்த்ததும் முரளி கலாய்க்கத் தொடங்கினான்.

"இருக்கிற கடுப்பில, சந்தோசம் கூத்தாடுதோ? நீ வேற, நானே தலையில இடி விழுந்த மாதிரி இருக்கின்றேன். அப்பவும் அக்கா கனடா வா, கனடா வா எண்டு கத்தினவா. நான்தான் விசரன் மாதிரி அங்கே போய் கடைவழிச்சா நிற்கவோ? என போகாம விட்டுவிட்டேன்" அழாக் குறையாக சரவணன் சொல்வதைப் பார்த்த முரளிக்கு சிரிப்பு வந்தது.

"டேய் நீ உன்னுடைய ஆள் இஞ்ச இருக்கிறதால் தானே கனடாவுக்கு போகாமல் விட்டனீ. இப்ப அவளும் உனக்கு ஓமென்று சொல்லிப்போட்டாள். இனி என்ன? ஏன் இப்ப என்ன பிரச்சினை? அடுத்தது கலியாணந்தானே?"

கவலை ரேகைகள் முகத்தில் படர, "நானும் அப்படித்தான் கனவில் மிதந்தனான். ஆனால் என் கனவில் இடி விழுந்து விட்டது. இந்த அரசாங்கம் இப்படியெல்லாம் சட்டம் போடுமென்று யார் கண்டது?அவள் என்னடாவென்றால் இப்ப உந்தத் தாலியறுக்க வந்த சட்டத்தை தூக்கிப் பிடிச்சுக் கொண்டு நிற்கின்றாள். நீயே சொல்லு உந்தச் சட்டத்துக்கு ஏற்றமாதிரி என்றால் எனக்குக் கலியாணம் நடக்குமே? அறுவார் நான் படிக்கும்போதுதான் சிலபஸ் மாத்துவாங்கள், நான் படிச்சு முடியத்தான் பல்கலைக்கழகம் படிப்புத் தரலாம் அதுக்காக வேலையெல்லாம் தருகின்ற பொறுப்பு எங்களுக்கு இல்லை என்பார்கள். கடைசியில் ஒரு கலியாணத்தைக் கட்டலாமெண்டால் தாலியறுக்கின்ற கதை கதைக்கின்றாங்கள். மைதானத்தில வந்து விளையாடுகின்ற வயசாடா எனக்கு?" மூச்சு முட்ட கருடன் படத்தில் சூரி நீண்ட வசனத்தை கடகட வென்று பேசுவது போல் இரைக்க இரைக்க சொல்லி முடித்தான்.

"டேய் அவங்கள் ஒன்றும் தாலி அறுக்கிற சட்டம் போடவில்லை. தாலியை அறுக்காம இருக்கத்தான் சட்டம் போட்டிருக்கின்றாங்கள். நீ முயற்சி செய்ய வேணும். முயற்சி செய்யாமால் இருந்து கொண்டு பேய்க்கதை கதைக்கக் கூடாது. உனக்கு இப்பவே மூச்சிரைக்கின்றது. நீ கலியாணம் கட்டி ...?"

"போடா தலைவலியும் காய்ச்சலும் தனக்கு தனக்கு வந்தாத்தான் தெரியும். என்ர உடம்பிருக்கின்ற நிலைக்கு நான் இனி ..... ஐயையோ இப்பவே கண்ணைக் கட்டுதே? அவள் இவ்வளவு நாளும் அந்த ரெஸ்ற்ரோறன்ட் கூட்டிட்டு போ, இந்த ரெஸ்ற்ரோறன்ட் கூட்டிட்டு போ என காசையும் கரியாக்கிப் போட்டு, இப்ப சட்டப்படி வந்தாத்தான் கழுத்தை நீட்டுவன் என்று சொல்லுறாள்.

சரவணா, நாட்டுப் பொருளாதாரம் சரியான பலவீனமாக இருக்கிறது. மருத்துவச் செலவுகள் கூடுது. எல்லாரும் கிளினிக் கொப்பியும் கையுமா திரியினம் , போதாக்குறைக்கு கலியாணம் கட்டினதுகள் எல்லாம் ' விஓஜி 'மாரைத் தேடி ஓடுதுகள். முன்னர் என்றால் கருத்தடை பற்றி விளம்பரம் செய்தவங்கள். இப்ப என்னடா என்றால், நான் கருக்கட்டுறன் நீ கருக்கட்டுறன் என்று விளம்பரம் போடுகின்ற அளவுக்கு நிலைமை.

அரசாங்கம் என்ன செய்ய? செலவுகளையும் குறைக்க வேண்டும். அதில் செலவைக் குறைக்கின்ற வழியில் வருமானமும் பெறலாம் என்றால் அரசாங்கம் சும்மா இருக்குமோ? போட்டான் பாரு சட்டம். ஜனாதிபதிக்கு உலக அளவில் பாராட்டுகள், விருதுகள் எனக் குவியுது. நீ என்னடா என்றால்?..."

" அதுக்கு நான் கலியாணம் செய்ய வெளிக்கிடும் போதுதான் இந்தச் சட்டம் எல்லாம் போட வேண்டுமோ? கடவுளே சோறு முக்கியமா? கலியாணம் முக்கியமா? நான் என்ன செய்ய?"

"என்னடா சோறு கலியாணம் என்று கதைக்கிறியள் கலியாணம் என்றால் சோறு முக்கியந்தானே? " இடையில் வந்த ஐங்கரன் நடப்பது, கதைப்பது என்ன என்று தெரியாமலேயே குறுக்கிட்டான்.

"அட சோற்றுக்கு பிறந்தவனே! உனக்குச் சோறு முக்கியமென்றால் கலியாணம் இல்லை" என்ற முரளியை முழிக்க முழிக்கப் பார்த்தான். சற்றுக் கழித்து அப்பாவியாக, "என்னடா சொல்லுகின்றீர்கள்?" என்றான்.

சரவணனுக்கோ சற்று ஆறுதலாக இருந்தது. எப்படியும் தனக்குப் பிறகு குறைந்தது ஒரு ஆறு மாதமாவது ஐங்கரனுக்கு கலியாணம் பிந்தும் என்பதில் ஐயமில்லை.

முரளி, ஐங்கரனுக்கு சட்டத்தை விளக்கமாகச் சொல்லத் தொடங்கினான்.

"இனி எங்கட நாட்டில பிள்ளைகளை பள்ளிக்கூடத்துக்கு சேர்க்கிறது என்றாலோ கலியாணம் கட்டிறது என்றாலோ, பாஸ்போட் எடுக்கிறது என்றாலோ, வங்கியில் கணக்கு திறக்கிறது என்றாலோ, அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்ன என்றாலும் சுகாதார அமைச்சினூடாகத் தருகின்ற கியூஆர் கோட் முக்கியமாம்"

"அதில் என்னடா இருக்கும்? என்னடா இலாபம் இதில் அரசாங்கத்துக்கு?"

"முதலில் இலாபத்தை சொல்லுகின்றேன் கேள், தொற்றா நோய்கள் குறையுமாம், ஆண் - பெண் மலட்டுத் தன்மைகள் குறையுமாம், அதனால் கிளினிக்குகள், மருந்துகள் செலவு என மருத்துவச் செலவு குறையுமாம் 'இ-இ' வரி மூலம் அரசாங்கத்துக்கு வருமானம் வருமாம் ....."

"என்னடா அது இ-இ வரி ...?'

சலிப்புடன் கேட்ட ஐங்கரனின் பொக்குளைச் சுற்றிய வயிற்றுப் பகுதியையும் அப்படியே கொஞ்சம் கீழாக இடுப்பையும் கண்களால் தேடினான் முரளி.

'வாய்ப்பில்லை ராஜா வாய்ப்பில்லை' என்ற முரளியை கடுப்புடன் ஐங்கரன் பார்க்க, சிரித்தவாறே வரிச் சட்டத்தைச் சொன்னான் சரவணன்.

உன்னுடைய இடைக்கும் இடுப்புக்கும் இடையில் உள்ள விகிதம். இந்த விகிதம் குறைந்தது 1 ஆக இருக்க வேண்டும். இல்லை என்றால் கலியாணம், பாஸ்போட், அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றும் சட்டப்படி இல்லை. அதை விட கொடுமை, கூடும் 'இ-இ' விகிதத்தின் ஒவ்வொரு தசம அளவுக்கும் வரி அதாவது "இடை - இடுப்பு வரி" வருடத்துக்கு கட்ட வேண்டுமாம். அதுவும் வரி ஐயாயிரம் ரூபாவில் இருந்து ஆரம்பிக்குதாம். தொபுக்கடீர் என்று சத்தம் கேட்டது. மணலுக்குள் கிடந்த தேரை, மல்லாக்கப் படுத்திருக்கிற மாதிரியே ஐங்கரன் நிலத்தில் .........!


## போதை எனும் அரக்கன்

போதை எனும் அரக்கன்
போரை விடவும் கொடியோன்
பாதை மாற வைத்து
பண்பு அதனைச் சிதைப்பான்!
நரம்பால் ஆன மூளையில் நாச காரம் புரிந்து
வரம்பை மீறி அடிமை
வசமாய் உன்னை கொல்வான்!

ஊறு வழியில் செல்ல
உந்தன் உருவைக் குலைத்து
தாறு மாறாய் பண்பில்
தகராறு பலதும் செய்வான்!

போதைப் பிடியில் மாண்ட
பேதை மனிதர் மீட்க
பாதை தனை நீ காட்டு
பகர்வாய் மனநல உதவி!

சூரியநிலா, உசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சாபிகேசன் :

## வான் நோக்கி உயர்ந்த நாதம்

○ கோகுலராகவன்

உலகப்புகழ் பெற்ற இசைமேதை பீத்தோவன் சொல்வார்.

"எல்லா ஞானங்களை விடவும், தத்துவங்களையும் விடவும் உயர்ந்தது மனிதன் இசையை உணர்வதுதான்"

இசையை உணர்வதற்கு இசையைப் படித்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

இந்த வாதம் அவசியமானது என்றால் தமிழ்த்திரையிசை, இவ்வளவு தூரம் வெற்றி பெற்று நிலைத்திருக்கும் வாய்ப்பு இல்லை.

இந்த அடிப்படையில்தான் நாதஸ்வர இசை கூட எம் வாழ்வோடு நீடித்து வந்து கொண்டிருக்கிறது.

இசை மனிதன் உருவாக்கிய ஒரு ஞானம் அல்லது அறிவு. மனிதன் உருவாக்கியதில் எந்தவித ஆபத்தையும் தராத ஒன்றென்றால் அது இசை மட்டுமே என்பது உண்மை.

இசையின்றி இந்த உலகம் இருக்குமா?என்று கேட்டால் இருக்கும். ஆனால் உயிர்ப்புடன் இருக்காது என்பதும் இன்னொரு உண்மை.

**'ஏன் இந்தப் பீடிகை?'**

இசையோடு ஒன்றித்துப் போக, எமக்கு அருகில் கிடைத்த ஒரு இசைக்கருவி நாதஸ்வரம் என்கிற ஒரு அற்புத வாத்தியம். இது தமிழர்களின் கண்டுபிடிப்பென்றே சொல்ல வேண்டும். இதை சைவ ஆலயங்கள் வளர்த்தெடுத்தன. அதற்கான வாய்ப்பை இறைவனுக்கு சமர்ப்பணம் செய்வதற்கான கலையாகக் கொண்டு சென்றதே இதன் மகத்துவம் உயர்ந்ததற்கான பெரிய காரணமாகிறது. இசைமூலம் இறைவனை அடைய முடியும் என்பதை நாயன்மார்கள் ஏற்கனவே காட்டி இருந்தனர். இதன் தொடர்ச்சியாக தவில், நாதஸ்வரம் என்பன் இறைவனை கவரும் கலையாக உருவெடுத்தன எனலாம். சைவசமய நிகழ்வுகளில் மங்கல வாத்தியம் என்ற நற்பெயரோடு தவில் - நாதஸ்வரம் இணைகிறது.




இதற்கான வித்துவான்கள் தோற்றம் பெற்றனர். மரபுசார்ந்த இசையைக் கற்றுக்கொண்டு அவர்கள் நாதஸ்வர - தவில் இசையை வழங்கும் போதுஇதன் மேன்மை உயர்வடைந்து மாபெரும் கலைவடிவமாக மாறுகிறது. இதற்கான மாற்றத்தையும், வடிவத்தையும், வளர்ச்சியையும் உருவாக்கி பெரியதொரு கலைஞனாக உருவாகிறார் திருவாவடுதுறை இராசத்தினம்பிள்ளை.

நாதஸ்வரக் கலையில் முதன் முதலில் நட்சத்திர அந்தஸ்து பெற்ற கலைஞன் அவராகவே இருக்க முடியும். இவரது தொடர்ச்சியாக காருக்குறிச்சி அருணாசலம், சேதுராமன் பொன்னுச்சாமி, ஷேக் சின்ன மௌலானா போன்ற இன்னும் பலர் உருவாகி சாதனை புரிந்தனர்.

இலங்கைத் தமிழ்ப் பிரதேசமும் இதற்கான வாய்ப்பு கொண்ட பிரதேசமாக இருந்தபடியால் இந்த அலை இங்கும் பரவத் தொடங்கியது.

ஈழத்திலும் பிரபல்யமான தவில் நாதஸ்வர கலைஞர்கள் உருவெடுத்தனர்.

பிரபல்யமான தவில் கலைஞர்களாக அளவெட்டி தட்சணாமூர்த்திப்பிள்ளை, நாச்சிமார் கோவில் கணேசன், அளவெட்டி குமரகுரு, இணுவில் சின்னராசா, அளவெட்டி சிவகுமார் போன்றவர்கள் உருவானபோது, அவர்களுக்குச் சமாந்தரமாக நாதஸ்வரக் கலைஞர்களான இணுவில் கோவிந்தசாமி, அளவெட்டி பத்மநாதன், சாவகச்சேரி பஞ்சாபிகேசன், அளவெட்டி பாலகிருஷ்ணன், இணுவில் சிதம்பரநாதன், கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி போன்ற முன்னோடிகளும் உருவாகினர்.

இந்த நாதஸ்வரக் கலைஞர்களில் யாழ்ப்பாணம் தென்மராட்சி சாவகச்சேரியை வாழ்விடமாக கொண்ட இசைப்பேரறிஞர் கலாநிதி எம்.பஞ்சாபிகேசன் முக்கியமான கலைஞராக பரிணமித்தவர்.

சாதாரண இரசிகனைக் கவரும், வாசிப்புத் திறன் கொண்டவராக இருந்த காரணத்தால் அதிக இரசிகர் பட்டாளத்தை தன்னகத்தே வைத்திருந்தார்.

ஒரு கீர்த்தனை, ஒரு பாடல் என்றால் அதற்கான ஆலாபனையை அற்புதமாக கிலாகித்து வாசிப்பது அவருக்கான மேலதிக அடையாளமாக இருந்தது.

சுருதியை சுத்தமாக வாசிப்பதில் தேர்ந்தவராக அவர் தன்னை மேம்படுத்தியதில் அவர் நிலையெடுத்துக் கொண்டார்.

எத்தனை கலைஞர்களோடு வாசித்தாலும் தன் வாசிப்பை உச்சமாக வைத்துக் கொள்வதில் அவர் பாங்கு தனியானது. பஞ்சாபிகேசன் தன் வாசிப்பை காருக்குறிச்சி அருணாசலம் அவர்களை அடியொற்றி வைத்துக்கொண்டார் என்பது பொதுவாக அவரது இரசிகர்களின் கணிப்பாகும்.

அவருக்கு இரண்டு விசேட அடையாளங்கள் இருந்தன ஒன்று, அவரது குடுமி. பல்லாயிரம் இரசிகர்கள் மத்தியில் மேடையில் அவர் குடுமி இளகிப் போனால் அதை அவிழ்த்துக் கட்டும் அழகை நான் பலதடவை இரசித்திருக்கிறேன்.

மற்ற அடையாளம், எத்தனை கலைஞர்களோடு வாசித்தாலும் தன் நாதஸ்வரத்தை வான் நோக்கி உயர்த்தி வாசிப்பது.

இன்று வரை நான் இத்தகைய ஆற்றல் கொண்ட இன்னொரு கலைஞனைக் காணவில்லை.

பஞ்சாபிகேசன், தொழில்முறையாக இருந்தாலும் தன் கலையை இறைவனுக்கு மனப்பூர்வமாக சமர்ப்பணம் செய்வதில் முன்னோடியாக கொள்ளக் கூடியவர்.

எந்த ஆலயத்தில் கச்சேரிக்கு வந்தாலும் அந்த ஆலயத்தை வீழ்ந்து வணங்கிய பின்னரே கச்சேரியை ஆரம்பிப்பதை வழக்கத்தை கொண்டவர்.

அவர் கச்சேரி செய்யாத கோயில்களே யாழ்ப்பாணத்தில் இல்லை எனலாம். தவில் மாமேதை தட்சணாமூர்த்திபிள்ளை, பஞ்சாபிகேசனுக்கான தவில் காரராக நீண்ட காலம் இருந்தவர். இது இருவருக்குமான சிறப்பை உயர்த்திக் காட்டுகிறது.

*(தென்மராட்சி தந்த அடையாளமாக திகழ்ந்த கலாநிதி பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா நாளை 01.07.2024 திங்கட்கிழமை சாவகச்சேரியில் கொண்டாடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர்த்தினம்

பாகம் 2

○ இராகவன்

இந்த ஒப்பிரேசன் லிபறேசன் பிரச்சினை தொடங்கிறதுக்கு முந்தி வந்த யாக் கருப்பிள்ளையார் கோயில் இராத் திருவிழாவுக்கைதான் ஒருநாள் நான் போன கிழமை குறிப்பிட்ட அந்தப் பிரசங்கியார் வந்து நுருபதன் கதையைப் பிரசங்கம் செய்தவர். அதுக்கு அத்தான்தான் என்னைச் சைக்கிள்ள ஏத்திக்கொண்டுபோனவர். பிரசங்கியார் துருபதனுக்கு மகாவிஷ்ணு வரங்குடுத்ததாலதான் துருவநட்சத்திரமாய் மாறினதெண்டு சொன்னாப்போல திருவிழாமுடிஞ்சு வரேக்குள்ள நான் அத்தானிட்ட, " உந்தப்பிரசங்கியார் பிழையாச் சொல்லிப்போட்டார். துருபதனுக்குச் சிவபெருமான் வரங்குடுத்துத்தான் துருவ நட்சத்திரமா மாறினவர்" எண்டு சொன்னன். 'உனக்கெப்பிடித்தெரியும் ?' எண்டு அந்தான் கேட்டார். ஒருபுத்தகத்தில் வாசிச்சனான் எண்டு சொன்னன். 'வாசிச்ச புத்தகத்தை கொணந்து காட்டுபாப்பம்' எண்டு அவர் சொன்னார். நல்ல வேளை - புத்தகம் கையிலயிருந்தது. கொண்டுபோய்க்காட்டினன். அவரும் அதை வாசிச்சுப்பாத்திட்டு, 'சரி நாளைக்கு இரவைக்குத் திருவிழாவுக்குப் போகேக்குள்ள உதை மறக்காமல் கொண்டுவா!' எண்டு சொன்னார். நானும் மறுநாள் இராத்திருவிழாவுக்குப் போகேக்குள்ள அந்தப்புத்தகத்தைக்கொண்டு போனன். ஆனால் அண்டைக்கு அந்தப்பிரசங்கியார் வரேல்ல.

46

சித்ருபானந்தாதான் அண்டைக்குப் பிரசங்கம் செய்தவர். பிரசங்கம் முடிய அத்தான் என்னிட்ட 'அந்தப் புத்தகத்தை தா' எண்டு என்னிட்ட வாங்கினார்.

'என்னோட வா' எண்டு என்னைக் கூட்டிக்கொண்டு கோயில் வாசலுக்கு முன்னாலயிருந்த மடத்தடிக்குப் போனார். அங்கை வாசல்படியில கோயில் பரிபாலனசபைத் தலைவர் வேலாயுத வாத்தியார் இருந்தார். அவர் ஆள்நல்ல சிவலை : சாதுவான வெண்தலை, அளவான உயரம், கண்ணாடி போட்டிருப்பார். யார்க்கரு விநாயகர் வித்தியாலய அதிபராகவுமிருந்தவர். அத்தான் அவரிட்ட, 'மாஸ்ரர் ஒரு நிமிசம்' எண்டாப்போல அவர் எழும்பி வந்து 'என்ன தம்பி சொல்லுங்கோ?' எண்டார். அத்தான் என்னைக் கூப்பிட்டு அவருக்கு முன்னால் விட்டு அறிமுகப்படுத்திப் போட்டு புத்தகத்தைக் குடுத்து விசயத்தைச் சொன்னார்.

அவரும் புத்தகத்தை வாசிச்சுப்போட்டு என்னைக் கூப்பிட்டு 'வளரும் பயிரை முளையில் தெரியும் எண்டது இதுதான் ' எண்டு சொல்லிக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சினார். எனக்கு ஒரே வெக்கமாப் போட்டுது. நான் இதை எதிர்பாக்கேல்ல.

'இந்தச் சின்ன வயதில் பிரசங்கத்தை வலு உன்னிப்பாக் கவனிச்சிருக்கிறீர். அதோட புத்தகம் வாசிக்கிறீர், உமக்கு நல்ல வளமான எதிர்காலம் இருக்கு' எண்டும் வாழ்த்தினார். அதுக்குப்பிறகு அத்தான் ஒவ்வொரு நாள் இராத்திருவிழாவிலயும் பிரசங்கம் முடிஞ்சாப் போல,'என்னடா விண்ணா இண்டைக்கும் எதும் பிழைகண்டு பிடிச்சியா?' எண்டு கேட்பார்.

*(தொடரும்)*

O பா.துவாரகன்

# நினைவுகளில் தமிழறிஞர்:

## க. உமாமகேசுவரம்பிள்ளை (05.05.1934 - 20.04.2024)

5

# இங்கிலாந்திலிருந்து வந்த கிராமபோன்

### ஒரு கிராமத்தின் வரலாறு

தெல்லிப்பழையிலுள்ள விழிசிட்டி என்ற கிராமத்தின் இரு நூற்றாண்டு வரலாற்றை எழுதவல்ல ஒருவர் இருக்கிறார். திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களே விழிசிட்டிக் கிராமத்தில் பிறந்து, தமிழ் மரபைக் காத்த அறிஞர்களது வரலாற்றை எழுதவல்லார். இவர் ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர்; ஆசிரியை; உளவள ஆலோசகர்; எழுத்துச் சிற்பி; சிறந்த பேச்சாளர்; நாடகக் கலைஞர்.... இவரது தந்தையார் செ. சிவசுப்பிரமணியம் பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

சில வருடங்களுக்கு முன்னர் ஒருநாள், உமாமகேசுவரன் அவர்கள் செ. சிவசுப்பிரமணியம் ஆசிரியரது கையெழுத்திலமைந்த இரண்டு அப்பியாசக் கொப்பிகளை எனக்குக் காண்பித்தார். அதிலே விழிசிட்டிக் கிராமத்தில் வாழ்ந்த மேன்மக்களின் சரிதம் இருந்தது. யாழ்ப்பாணம் அரசினர்(சிவில்) வைத்தியசாலைக்கு அதிபராக இருந்த மருத்துவர், விழிசிட்டி கா. பொன்னையா அவர்களின் சரிதமும் பழுப்பு நிறமாகிப்போன தாள்களில் நீலநிறக் கையெழுத்திலிருந்தன.

### அஞ்சலிக் குறிப்புகளும் தவறவிட்ட புகைப்படமும்


உமாமகேசுவரன் அவர்களிடம் தங்களுக்கு இசை ஈடுபாடு எவ்வாறு ஏற்பட்டது என்று ஒருநாள் கேட்டேன். அவர் சொன்னார், "எங்கள் வீட்டில் ஒரு ஓடியன் கிராம போன் இருந்தது. அதை அப்பாவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தவர் மருத்துவர் கா. பொன்னையா. அவர் புலமைப் பரிசில் பெற்று இலண்டனுக்குச் சென்று உயர் மருத்துவப் பட்டம் பெற்று திரும்பி வரும்போது இந்த கிராமபோனைக் கொண்டு வந்து அப்பாவுக்கு கொடுத்தார். யாழ்ப்பாணத்திலிருந்த ஏ.கே. முகம்மது கடையில் வாங்கிய ஏறத்தாழ 500 வரையான இசைத்தட்டுக்கள் அப்பாவிடமிருந்தன. எங்களது இசை அறிவென்பது கேள்வி ஞானம்".

பண்டிதர் கதிரிப்பிள்ளையின் முன்னோர், உறவினர்கள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவருமே இசைஞானம் மிகுந்தவர்கள். உமாமகேசுவரனது பிள்ளைகள் சுமுகனும் சேக்கிழானும் சிறுவயதிலேயே ஒரு பாடல் இசைக்கப்படும் போது அது என்ன இராகம் என்று கேட்டால் சொல்லும் வல்லமையுடையவர்களாக இருந்தனர். அந்தக் காலத்தில் விழிசிட்டியில் மதுரைப் பண்டிதர் ஆ. கனகசபை போல் பாடக்கூடியவர்கள் வேறு எவருமே இல்லை என்று கோகிலா மகேந்திரன் ஆசிரியை கூறுவார்.

பண்டிதர் கனகசபை திருக்கேதீச்சரத்தில் ஓதுவாரக இருந்து ஆலயத்திலேயே அவர் உயிர் துறந்தார். சீவன் சிவாலயம் ஒன்றில் இவ்வுலகை விட்டு நீங்குவது மெத்த விசேடமானது என்று நல்லைநகர் நாவலர் பெருமான் கூறியிருக்கிறார். பீஷ்மர் உத்தராயணகாலத்தில் உயிர் துறக்க வேண்டும் என்பதற்காக அர்ஜுனன் தொடுத்த அம்புப் படுக்கையில் பல நாள் இருந்து உயிர் துறந்தார்.

சொர்க்கவாயில் ஏகாதசியில் உயிர்நீத்தல் வேண்டும் என்பதற்காக ஈழத்துச் சிதம்பர அந்தண சிவாசாரியார் சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்கள் (1911.07.17 - 2001.12.26) காத்திருந்தார். ஒருநாள் குறித்த ஒரு மாத ஏகாதசிக்குச் சில தினங்கள் முன்னர் தனது உறவினர்களை அழைத்து பசுக்கன்று ஒன்றைத் தானம் செய்யச் சொன்னார். எல்லா ஏற்பாடுகளும் நடந்தன. சிலநாள்களில் ஏகாதசியில் உயிர் பிரிந்துவிடும் என்று எல்லாரும் விழித்திருந்தனர். குருக்கள் நீண்ட உறக்கத்திலிருந்தார். ஏகாதசியும் வந்தது. திருவாசகம் பாடிக் கொண்டிருந்தார்கள். நித்திரையில் இருந்து விழித்தது போல் அவர் இவ் உலகு மீண்டார்.

ஒன்பது வருடங்கள் கடந்தன. அன்று மார்கழி மாத சொர்க்க வாயில் ஏகாதசி. காலை 5.30 மணி சொர்க்கவாயில் கதவுகள் திறக்கும் நேரம், சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்களது வதனம் மழலையின் பால்நிலவு போன்றிருந்தது. திருவாசகம் ஒலித்துக்கொண்டிருந்து. "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்ற சிவபுராண வரிகள் ஒலிக்கும் போது அவரது ஆன்மா அரன் கழலைப் பற்றியது. அவ்வேளை காரைநகரில் அவர்கள் குடியிருந்த வீட்டு வாயிலுக்கு எங்கிருந்தோ வந்த பால் வெண்ணிறப் பசு ஒன்றின் அழுகுரல் கேட்டது. சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக்குருக்கள் சாந்தமே உருவானவர். அவரது பாதம் பட்டு புற்கள் சாகாது. 'மங்களேஸ்வரக்' குருக்கள் அவர்கள் தங்களுடைய பிள்ளைகளின் திருமணக் கிரியையைச் செய்து வைக்க வேண்டும் என்பதற்காக காரைதீவில் வாழ்ந்த பெற்றோர் சிலர் குருக்க ளுக்குப் பொருத்தமான மாதத்தை தேர்வு செய்தனர். மங்களேஸ்வரக்குருக்கள் கொடுகின்ற தட்சணையை ஒருபோதும் எண்ணிப் பார்க்க மாட்டார். தட்சணையாக 5 ரூபா கொடுத்தாலும் 50 சதம் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வார். அவர் பசுக்களிலும் புறாக்களிலும் பேரன்பு கொண்டவர். தினமும் கோயிற் கிரியைகள் நிறைவு செய்து ஈழத்துச் சிதம்பர தேரோடும் வீதியிலிருந்த வீட்டுக்கு வருவதற்கு பி.ப. 2.00 மணியாகி விடும். பசுக்களுக்கு தவிடும் ஏனைய உணவும் வைத்துவிட்டுத்தான் தான் உணவு அருந்தச் செல்வார். மகோற்சவகாலத்தில் மகோற்சவ பிரதம சிவாசாரியாராக அதிகாலை இரதோற்சவத்துக்குச் சென்றால் மறுநாள் கொடியிறக்கம் நிறைவு செய்து வீட்டுக்கு வந்துதான் உணவு அருந்துவார். அந்த இரு தினங்களும் கோயிலில் வெறும் 'பச்சைத்' தண்ணீரோடு உபவாசம் இருப்பார்.




பண்டிதர் க. உமாமகேசுவரன்

சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள் அவர்கள் ஈழத்துச் சிதம்பரம் என்ற பெயரை உலகறியச் செய்த பேரறிஞர் கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீசுவரக்குருக்களது சகோதரர். 'இவர்கள் இருவரும் கடவுளுக்குச் சமன்' என்று காரைநகரைச் சேர்ந்த அன்பர் ஒருவர் கூறியதைக் கேட்டேன்.

பண்டிதர் உமாமகேசுவரன் அவர்கள் வைத்தீசுவரக்குருக்களைப் பற்றிக் கூறினால் கண் கலங்குவார். அதிதீரன் என்ற தனது கட்டுரையைத் தான் எழுதுவதுக்குக் காரணமானவர் வைத்தீசுவரக்குருக்களே என்பார். அதிதீரன் காரைநகர் மணிவாசகர் சபை பொன்விழா மலரில் வெளிவந்தது. பின்னர் வைத்தீசுவரக்குருக்கள் அதிதீரன் என்ற கட்டுரையை தனது சொந்தச் செலவில் மறுபதிப்புச் செய்து 100 பிரதிகள் அச்சிட்டு எனது 59 ஆவது பிறந்த தினத்தன்று வீடு தேடிவந்து கொணர்ந்து தந்தார். "அவருக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்" என்று கூறும்போது கைகூப்பி வணங்குவார் உமாமகேசுவரன். பண்டிதர் உமாமகேசுவரன் அவர்கள் புராணபடனம் செய்வதிலும் வல்லவர். புராணம் என்ன இராகத்தில் வாசிக்கப்படுகிறதோ அதே இராகத்தில் உரை சொல்லும் மரபு யாழ்ப்பாணத்தில் நிலவியது. இவ்வாறு உரை சொல்லக் கூடியவர்கள் இப்போதும் இருக்கிறார்கள். அமரர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் கந்தபுராணத்திற்கு உரை சொல்லிக்கொண்டிருந்தார். கந்தபுராணச் செய்யுள் பாடிய அதே இராகத்தில் அவரது உரை அமைந்திருந்தது. அவர் தன்னை மறந்திருந்தார். சுவாமிக்கு முன்னிருந்து மரபு தவறாது புராணபடனம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அங்கு நிசப்தம் நிலவியது. புராணத்துக்கு பண்டிதர் வ. பேரின்பநாயகம் உரை சொன்ன அழகை எவ்வாறு எழுதுவது? அவர் வதனத்தில் நிலவின் ஒளிபோல் பிரகாசம் தெரிந்தது. எனக்கு அந்தக் காட்சியைப் புகைப்படம் எடுக்க வேண்டும் போலிருந்தது. எனினும் படம் எடுப்பதற்கு அச்சமாக இருந்தது. பேரின்பநாயகம் அவர்கள் அமரத்துமடைந்த பின்பு இவ்விடயத்தை ஆறா அன்புடைய இளையவனிடம் கூறினேன்; படம் எடுத்திருக்கலாமே என்றார்.

குறிப்பிட்ட சில இராகங்களில் புராணம் படிக்கும் மரபும் யாழ்ப்பாணத்தில் நிலவுகிறது. பண்டிதர் பேரின்பநாயகம் சஹானா இராகத்தில் புராணம் படிக்க விரும்புவதில்லை என்பதைப் பின்னர் அறிந்து கொண்டேன். அது ஒரு தனிக்கதை.



விழிசிட்டி Dr. கா. பொன்னையா
38-05-14

அறிஞர்புகழ் யாழ்ப்பாணத் தரசர்வயித் தியசாலைக்
கதிப னாகிச்
சிறியரிவர் பெரியரிவர் செல்வமுளா ரிலரென்னுஞ்
செவ்வி நோக்கா
துறுசமய நாடாதங் கெவருறினுந் துலைநாப்போல்
உஞற்று நோன்பன்
பொறுமைநிறை குணதிலகன் பொன்னையா வெனுநாமம்
பொருந்துங் கோமான்

மேனாட்டு வயித்யமுறை தானாய்ந்து தமிழறிஞர்
வியக்கும் வண்ணம்
தானாட்டித் தனதுமதி நுண்மையினாற் பிணியோட்டித்
தயங்கு வென்றித்
தூணாட்டித் தூயமனத் துதித்திடுமன் பெனுந்தொடரைச்
சொலுநோ யாளர்
பானாட்டித் திசைகளெலா மிசைநாட்டி யுதிக்குமொரு
பரிதி போல்வான்.

பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலைக்கு அதிபராக இருந்த விழிசிட்டியைச் சேர்ந்த மருத்துவர் கா. பொன்னையா அவர்களது சேவையை வாழ்த்திப் பாடிய பாடல்கள் இவை. (ஆதாரம்: குஞ்சிதபதம் - பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை நினைவு மலர் - 1986)

தகவல் : பா.துவாரகன்

### யாழ்ப்பாண சிவில் வைத்தியசாலை அதிபர் மருத்துவர் கா. பொன்னையா

யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலைக்கு அதிபராக இருந்த விழிசிட்டியைச் சேர்ந்த மருத்துவர் கா. பொன்னையா அவர்களது சேவையை மெய்ச்சி பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்கள் பாடிய இரு பாடல்கள் 1986 ஆம் ஆண்டு உமாமகேசுவரன் பதிப்பித்த பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை நினைவு மலரில் இடம்பெற்றுள்ளன.

**விழிசிட்டி மருத்துவர். கா. பொன்னையா (38.05.14)**

அறிஞர்புகழ் யாழ்ப்பாணத் தரசர்வயித் தியசாலைக்
கதிப னாகிச்
சிறியரிவர் பெரியரிவர் செல்வமுளா ரிலரென்னுஞ்
செவ்வி நோக்கா
துறுசமய நாடாதங் கெவருறினுந் துலைநாப்போல்
உஞற்று நோன்பன்
பொறுமைநிறை குணதிலகன் பொன்னையா வெனுநாமம்
பொருந்துங் கோமான்

மேனாட்டு வயித்யமுறை தானாய்ந்து தமிழறிஞர்
வியக்கும் வண்ணம்
தானாட்டித் தனதுமதி நுண்மையினாற் பிணியோட்டித்
தயங்கு வென்றித்
தூணாட்டித் தூயமனத் துதித்திடுமன் பெனுந்தொடரைச்
சொலுநோ யாளர்
பானாட்டித் திசைகளெலா மிசைநாட்டி யுதிக்குமொரு
பரிதி போல்வான்

மேலுள்ளவை விழிசிட்டிக் கிராமத்தில் பிறந்து, தமிழ் மரபைக் காத்து, மருத்துவத் தொழிலின் மகத்துவத்தை பாரறியச் செய்து, பரிதிபோற் திகழ்ந்த மருத்துவர் கா. பொன்னையா அவர்கட்கு உமாமகேசுவரனது தந்தையார் பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்கள் எழுதிய கவிதாஞ்சலி! மருத்துவர் கா. பொன்னையா இலண்டன் சென்று பட்டப்படிப்பை நிறைவை செய்து ஊர் திரும்பிய போது விழிசிட்டியில் வரவேற்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. பண்டிதர் கதிரிப்பிள்ளையவர்களது வீட்டிலேயே இவ்வரவேற்பு விழா சிறப்புற நிகழ்ந்தது..

(கட்டுரை இருவாரங்களுக்குப் பின்னர் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org